விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 25 வியாழக்கிழமை (11.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 327

## 'ஒரே நாடு - ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியில் 3 தமிழ் உறுப்பினர்கள் நியமனம்

அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)
"ஒரே நாடு - ஒரே சட்டம்" என்பதற்கான ஜனாதிபதி செயலணிக்கு மூன்று தமிழ் உறுப்பினர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.
இது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவினால் வெளியிடப்பட்டுள்ளது.
இதற்கமைய ராம 15


### சீரற்ற காலநிலை
## உயிரிழப்பு 25 ஆக உயர்வு

(கொழும்பு)
நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையினால் கடந்த ஒக்ரோபர் 29ஆம் திகதி முதல் நேற்று மாலை 5.30 மணி வரை, 25 பேர் உயிரிழந்துள்ளதாக 15

### கொரோனா
## 16 பேர் பலி

(கொழும்பு)
இலங்கையில் கோவிட் தொற்றுக்குள்ளாகி மேலும் 16 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் 15

### போராட்டங்கள், ஊர்வலங்களால்
# நாடு மீண்டும் முடக்கப்படலாம்



## ஜனாதிபதி கோட்டா எச்சரிக்கை

(கொழும்பு) போராட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தினால் நாடு மீண்டும் முடக்கப்படலாம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.
(15ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் மழை தொடரும்

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாணத்தின் சில பிரதேசங் 15

### வடக்கின் நிலைவரங்கள் தொடர்பில்
## பிரதம ஆசிரியர்களுடன் வடக்கு ஆளுநர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களுடன் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா முக்கிய சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் 15

## அதிபர் - ஆசிரியர் சம்பள முரண்பாட்டுக்கு ஜனவரிக்குள் தீர்வு

தொழிற்சங்க தொடர் போராட்டங்களுக்கு வெற்றி

(கொழும்பு)
அதிபர் - ஆசிரியர் சம்பளப் பிரச்சினைக்கு 2022 வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக ஜனவரி மாதத்திற்குள் தீர்வு வழங்க அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது.
பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமை 15

## கொரோனா வைரஸ் தொற்று யாழில் மீண்டும் அதிகரிப்பு

மாவட்ட அரச அதிபர் மகேசன்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.
நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே 15



## வடக்கின் அனைத்து பாடசாலைகளும் இன்று நடைபெறும்

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாணத்தின் அனைத்துப் பாடசாலைகளின் செயற்பாடுகளும் இன்று தொடக்கம் வழமைபோல நடைபெறும் என்று வடக்கு 15

## வீடுகளுக்குச் சென்று முதியவர்களுக்கு சிகிச்சை

வடக்கு ஆளுநர் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)
வீடுகளுக்குச் சென்று முதியவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கும் ஏற்பாடு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண 15


### கொரோனா
## மன்னாரில் பெண் மரணம்

(மன்னார்)
கொரோனாத் 15

## மக்கள் ஆதரவளிக்காவிட்டால் மீண்டும் பயணக் கட்டுப்பாடு

சுகாதார அமைச்சர் கெஹலிய

(கொழும்பு)
பொதுமக்கள் ஆதரவளிக்காவிட்டால் நாட்டில் மீண்டும் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.
நேற்று கொழும்பு 15



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த கந்தசஷ்டி உற்சவத்தின் சூரசம்காரத் திருவிழா நேற்றுப் புதன்கிழமை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மட்டுப் படுத்தப்பட்ட கந்தன் அடியார்களுடன்ளுடன் ஆலய உள்வீதியில் இடம்பெற்றது.

# காரைநகரில் கரை ஒதுங்கிய இந்திய மீனவரின் சடலம் கோம்பயனில் அடக்கம்

(கரணவாய்)

கடல் சீற்றம் காரணமாக நடுக்கடலில் தவறிவிழுந்து உயிரிழந்த நாகை மாவட்ட மீனவரின் சடலம் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நேற்று புதன்கிழமை பிற்பகல் அடக்கம் செய்யப்பட்டது.

நாகை மாவட்டம் வேதாரண்யத்தை அடுத்துள்ள ஆற்காடுதுறையில் இருந்து கடந்த 2ஆம் திகதி சாமிநாதன் என்பவருக்கு சொந்தமான பைபர் படகில் கேசவன், பழனி, திருமால் ஆகிய மீனவர்கள் மூவரும் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர்.

நடுக்கடலில் அவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருக்கும்போது கடல் சீற்றம் காரணமாக படகிலிருந்த பழனி கடலில் தவறி விழுந்து மாயமானார்.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை காரைநகர் கடற்கரையில் இவரது சடலம் கரை ஒதுங்கியது.

இந்நிலையில் இந்திய மீனவரின் சடலம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய கோம்பயன் மணல் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. (ம-60)

# வடக்கு, கிழக்கு ஆயர்களுடன் சுவிஸ் தூதுவர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சுவிஸ்சர்லாந்தின் தூதுவர் டொமினிக் பார்க்லர் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த கத்தோலிக்க ஆயர்களை நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

யாழ்ப்பாணம் வந்த சுவிஸ்சர்லாந்து தூதுவர் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் வடக்கு கிழக்கு ஆயர்களை சந்தித்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் சமகால நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பில் யாழ். ஆயர் வண. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, மன்னார் ஆயர் வண. இம்மனுவேல் பெர்னாடோ ஆண்டகை, திருகோணமலை ஆயர் வண. நோயல் இம்மனுவேல் ஆண்டகை ஆகியோர் பங்கேற்றனர். (ம)

# திருடப்பட்ட மோ. சைக்கிளில் பயணித்த திருடன் விபத்தில் காயம்

## தருமபுரத்தில் சம்பவம்

(தருமபுரம் )

தருமபுரத்தில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிளில் பயணித்த திருடன் ஒருவன் விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்துள்ளான்.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட முசுரம்பிட்டி பகுதியில் நேற்றையதினம் வீட்டு முற்றத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை பட்டப்பகலில் திருடிக்கொண்டு அதி வேகத்தில் பயணித்த திருடன் வீதி விபத்தில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்ட மோட்டார் சைக்கிளை தருமபுரம் பொலிஸார் மீட்டுள்ளனர். மேலும் கடந்த ஒரு வாரத்திற்கு முன்னர் குறித்தநபர் அதே பகுதியில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை களவாடி பருத்தித்துறை பொலிஸாரால் பிடிக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. (ம - 316)


உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு:

தொலைபேசி:
076 097 3127
021 221 7603

Viber: 076 636 3378

E.mail:
valampurii@yahoo.com



கிளி / சோரன்பற்று சி.சி.த.க பாடசாலை
பேராலை - பளை

பாராட்டி வாழ்த்துகின்றோம்


நிமலராசா பம்சிகா 187


தவகுமார் கிருத்திகா 159


திரு. நடராசா ராமதாஸ் (அதிபர்)


திருமதி கமலாதேவி பவநீதராசா (ஆசிரியை)

2020 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மேற்படி மாணவிகளையும் அவர்களை நெறிப்படுத்திய அதிபர் திரு. நடராசா ராமதாஸ் அவர்களையும் வகுப்பாசிரியை திருமதி கமலாதேவி பவநீதராசா அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு இன்றைய பரிசில் நாள் சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்.

ஊடக அனுசரணை
சின்னையா - குணபாலசிங்கம்
கனடா - இத்தாவில், பளை

(8563)

பாடசாலைச் சமூகம்
கிளி / சோரன்பற்று சி.சி.த.க பாடசாலை
பேராலை, பளை.


# கொரோனா +488

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 488 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.


சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள பிந்திய அறிக்கையில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கோவிட் தொற்றுக்கு உள் ளானவர்களின் எண்ணிக்கை 547,141 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றில் இருந்து மேலும் 333 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

# இணைந்த வடக்கு - கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை அமெரிக்காவிடம் வலியுறுத்த வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

**ஒற்றை ஆட்சியின் கீழான எந்தவொரு அதிகாரப் பகிர்வு ஏற்பாடும் தமிழ் மக்களை காப்பாற்றாது. ஏற்கனவே 13 ஆவது திருத்தம் அமுல்படுத்தப்படாமல் இருக்கிறது. இணைந்த வடக்கு - கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வே நிரந்தரத் தீர்வாக அமையும். அமெரிக்கா செல்லும் தமிழரசுக் கட்சியின் குழு இதனை வலியுறுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த வாராந்த கேள்வி - பதிலிலே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் கட்சிகள் பல அண்மையில் யாழ்ப்பாணத்தில் கூடி 13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்துவதற்கு இந்தியாவை கோருவதற்கு மேற் கொண்ட முடிவு எந்தவிதத்திலும் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வின் அடிப்படையிலானது என்று கொள்ளக் கூடாது.

13 ஆவது திருத்தச் சட்டம் 1987 ஆம் ஆண்டு இந்திய தலையீடு காரணமாக இலங்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒன்று. இது இலங்கையின் ஒற்றை ஆட்சி அரசியல் அமைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒரு அதிகாரப் பரவலாக்கமே அன்றி அதிகாரப் பகிர்வு அல்ல.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக நாங்கள் கோரி வருவது மத்தியில் இருந்து (மீளப்பெற முடியாதவாறு) அதிகாரத்தை பகிர்ந்துகொள்ளும் சமஷ்டி அல்லது கூட்டு சமஷ்டி கட்டமைப்பையே ஆகும். பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் தற்போது எமது அரசியல் யாப்பின் ஒரு அங்கம். சட்ட ரீதியாக அரசியல் யாப்பின் ஒரு அங்கமான இந்தத் திருத்தச் சட்டத்தின் ஊடாக தமிழ் பேசும் மக்களுக்கு கிடைக்க வேண்டிய முழுமையான அதிகாரத்தை எமக்கு தருமாறு இலங்கை அரசாங்கத்திடமும் இந்திய அரசாங்கத்திடமும் வலியுறுத்தும் உரிமை எமக்கு இருக்கின்றது.

இந்தச் சட்டத் திருத்தத்தின் கீழ் எமக்கிருக்கும் முழுமையான அதிகாரத்தைப் பெற்றுக் கொடுக்கும் தார்மீகக் கடமையும் பொறுப்பும் இந்தியாவுக்கு இருக்கின்றது. 13 ஆவது திருத்த சட்டம் 1987 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அன்றே இது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு அல்ல என்று திட்டவட்டமாக தமிழ் அரசியல் தலைமைகளால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. இந்த 13 ஆவது திருத்த சட்டத்தின் கீழ் நாம் விரும்பியோ விரும்பாமலோ அரசியல் செய்து வந்துள்ளோம்.

நான் முதலமைச்சராகப் பதவி வகித்ததும் பலவீனப்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்த சட்டத்தின் கீழ்த்தான். நான் முதலமைச்சராக பதவி வகித்த போதே 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறும் பொலிஸ் அதிகாரம் உட்பட எல்லா அதிகாரங்களையும் எமக்கு வழங்குமாறும் நான் வலியுறுத்தி வந்தேன். ஏனென்றால், சட்ட ரீதியாக இந்த அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வது எமது உரித்தானது.

அதேவேளை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி யாழ். வந்தபோது 13 ஆவது திருத்த சட்டத்தின் கீழ் எமக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றும் சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினேன். இந்தியப் பிரதமர் மோடி இலங்கை பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது கூட்டுறவு சமஷ்டியின் அவசியம் பற்றி வலியுறுத்தினார். ஆகவே, இந்தியா கூட இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு 13 ஆவது திருத்தம் ஒரு தீர்வு அல்ல என்ற யதார்த்தத்தை உணர்ந்துள்ளதாகவே நான் காண்கின்றேன்.

இன்று எம் மீது பாரிய ஒரு இன அழிப்பு மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. "ஒரே நாடு ஒரே சட்டம்" என்ற அரசாங்கத்தின் திட்டம் தமிழ் பேசும் மக்கள் மீதான மற்றொரு முள்ளிவாய்க்கால் அன்றி வேறு எதுவும் இல்லை. இதனை நாம் வெற்றிகரமாக முறியடிக்க வேண்டும்.

நீர்த்துப்போகச்செய்யப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் இருந்தும் எமது வடக்கு - கிழக்கு தாயகத்தில் பல ஆயிரம் ஏக்கர் நிலத்தை நாம் பறிகொடுத்துள்ளதும் பல சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதும் உண்மை.

13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துமாறு நாம் இந்தியாவைக் கோருவதை நாம் எமது சுயநிர்ணய உரிமையினைக் கைவிட்டு, சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட்டு 13 ஆவது திருத்தத்தை ஒரு தீர்வாக ஏற்றுக்கொள்வதாக அர்த்தப்படுத்தக்கூடாது.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் உட்பட சர்வதேச சமூகத்துடன் தமிழர் தரப்பு பேச்சுவார்த்தைகளிலும் இராஜதந்திர செயற்பாடுகளிலும் ஈடுபடுவது அவசியம். சர்வதேச ரீதியான மத்தியஸ்தம் இல்லாமல் எமது பிரச்சினைக்கு நிலையான தீர்வு காண முடியாது. அந்த அடிப்படையில், அமெரிக்காவுடன் பேசுவதற்கு தமிழரசுக் கட்சி பிரமுகர்கள் செல்வதில் எந்தத் தவறும் இல்லை. இதில் எனக்கு எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியோ அல்லது பொறாமையோ இல்லை. எந்தப் பின்னணியில் எவர் பேச்சுக்குச் சென்றாலும் எமது மக்களின் அரசியல் தீர்வு தொடர்பிலான நிலைப்பாடுகளை அவர்கள் செல்லும் இடங்களில் தெளிவாக வலியுறுத்தும் வரையில் எனது ஆதரவு அவர்களுக்கு இருக்கும். அவர்கள் அவ்வாறு வலியுறுத்துவதால் முரண்பாடுகள் எதுவும் ஏற்படப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

---

# காரைநகர் பிரதேச சபை தவிசாளராக சுயேட்சைக் குழு உறுப்பினர் தெரிவு

(குப்பிழான்)

காரைநகர்ப் பிரதேச சபையின் தவிசாளராக சுயேட்சைக் குழு உறுப்பினர் ஈ.பி.டி.பி.கட்சியின் ஆதரவுடன் வெற்றி பெற்றுள்ளார்.

காரைநகர்ப் பிரதேச சபையின் தவிசாளர் உயிரிழந்த காரணத்தினால் காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது. இந்நிலையில் நேற்றுப் புதன்கிழமை முற்பகல் காரைநகர்ப் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவுக்கான விசேட அமர்வு உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் நடைபெற்றது.



குறித்த அமர்வின் போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் காரைநகர் பிரதேச சபை உப தவிசாளர் பாலச்சந்திரன் போட்டியிடவிருந்த போதிலும் அவருக்கு ஏனைய கட்சிகள் ஆதரவு அளிக்காத நிலையில் சுயேட்சைக் குழு கட்சியைச் சேர்ந்த அப்புத்துரை தவிசாளர் பதவிக்குப் போட்டியிட்டார்.

இந்நிலையில் அவர் ஈ.பி.டி.பி.கட்சியின் ஆதரவுடன் வெற்றியீட்டினார். (4-5-18-104-33)

---

# பயங்கரவாதத்தைத் தோற்கடித்த இலங்கையிடம் ஏனைய நாடுகள் பாடம் கற்க வேண்டுமாம்

## இப்படிச் சொல்கிறார் இந்தியக் கடற்படை அதிகாரி

(டில்லி)

தமிழீழ விடுதலைப் புலிக்களை வெற்றிகரமாக தோற்கடித்த இலங்கையிடம் ஏனைய நாடுகள் பாடம் கற்றுக் கொள்ள வேண்டுமென இந்தியா கடற்படைத் தளபதி அட்மிரல் கரம்பீர் சிங் தெரிவித்தார்.

கோவா கடல்சார் பாதுகாப்பு கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியா, மாலைதீவு மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் புலனாய்வுத் தகவல்களை பரிமாறிக் கொள்ளவுள்ளன. பயங்கரவாத அச்சுறுத்தல்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தல் போன்றவற்றை முறியடிப்பதற்காக இவ்வாறு புலனாய்வுத் தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்பட உள்ளன.

இந்து சமுத்திர பிராந்திய வலய நட்பு நாடுகள் கூட்டாக இணைந்து கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளன.


நட்பு நாடுகளுக்கு கடல்சார் பாதுகாப்பு குறித்த பயிற்சிகளை வழங்க இந்தியா நடவடிக்கை எடுக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கை வெற்றிகரமாக தோற்கடித்தது. ஏனைய நாடுகள் இலங்கையிடமிருந்து நிறைய பாடங்களை கற்றுக் கொள்ள முடியும் என சுட்டிக்காட்டினார். (நி-5)

---

# சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்க நடவடிக்கை

## பாராளுமன்றில் பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டார்.

அத்துடன், நிவாரணத் திட்டங்கள் தொடர்பில் அனர்த்த முகாமைத்துவத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

அனர்த்த நிலையை எதிர் கொள்வதற்கு எதிரணியினர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் பிரதமர் கோரிக்கை விடுத்தார். (நி-5)

# ஜப்னா கிங்ஸ் அணியின் மூன்று தமிழ் வீரர்கள்




இரண்டாவது லங்கா பிரீமியர் லீக் தொடரில் பங்கேற்கவுள்ள அணிகளுக்கான வீரர்கள் தெரிவு நேற்று முன்தினம் இடம் பெற்றது. இதற்கமைய ஜப்னா கிங்ஸ் அணிக்கு பாப் டு ப்ளஸிஸ், கண்டி வோரியர் அணிக்கு ரோவ்மென் பொவெல், காலி க்ளேடியேடர்ஸ் அணிக்கு மொஹமட் ஹபிஸ், கொழும்பு ஸ்டார்ஸ் அணிக்கு க்றிஸ் கெய்ல், தம்புள்ளை ஜெயன்ட்ஸ் அணிக்கு இம்ரான் தாஹிர் ஆகிய வெளிநாட்டு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன், ஜப்னா கிங்ஸ் அணிக்காக வடக்கு, கிழக்கினைச் சேர்ந்த Rathnarajah Thenurathan, Theivendiram Dinoshan, Vijayakanth Viyaskanth ஆகிய மூன்று தமிழ் வீரர்கள் உள்வாங்கப்பட்டுள்ளமைக் குறிப்பிடத்தக்கது. (4-6)



தேசிய இளைஞர்கள் சேவை மன்றம் மற்றும் விளையாட்டு அமைச்சும் இணைந்து நடத்தும் கடற்கரை கரப்பந்து போட்டியின் தேசிய மட்ட போட்டிகள் அம்பாந்தோட்டை தங்காலை கடற்கரையில் நேற்று முன் தினம் தொடங்கியது. (படம் : கிருஷ்ணகுமார்)

# டெஸ்ட், ஒரு நாள் தொடர் அணித்தலைவர் பதவியிலிருந்து கோலி விலகக்கூடாது

## ஷேவாக் வலியுறுத்து




இந்திய கிரிக்கெட்டின் 3 வடிவிலான போட்டிக்கும் (டெஸ்ட், ஒருநாள் போட்டி, 20 ஓவர்) கப்டனாக விராட் கோலி பணியாற்றி வந்தார்.

கப்டன் பொறுப்பு சுமையால் தனது பட்டிங் திறன் பாதிக்கப்படுவதாக அவர் கருதினார். இதனால் 20 ஓவர் போட்டிக்கான கப்டன் பதவியில் இருந்து மட்டும் அவர் விலகியுள்ளார்.

தற்போது முடிந்த 20 ஓவர் உலகக்கிண்ண போட்டியுடன் அவர் கப்டன் பதவியை துறந்தார். அதே நேரத்தில் ஒருநாள் போட்டி மற்றும் டெஸ்ட் போட்டிகளில் கோலி தொடர்ந்து கப்டன் பதவியில் நீடிப்பார்.

20 ஓவர் கப்டன் பதவியில் இருந்து விலகினாலும், 20 ஓவர் அணியில் தொடர்ந்து ஆடுவேன் என்று அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே 20 ஓவர் உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தான், நியூசிலாந்திடம் தோற்றதால் விராட் கோலியின் கப்டன் பதவி குறித்து கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகிறது. ஒருநாள் போட்டி மற்றும் டெஸ்ட் கப்டன் பதவியும் அவரிடம் இருந்து பறிக்கப்படலாம் என்ற யூகங்கள் எழுந்துள்ளன.

இந்த நிலையில் டெஸ்ட், ஒருநாள் போட்டி கப்டன் பதவியில் இருந்து விராட் கோலி விலகக்கூடாது என்று முன்னாள் அதிரடி தொடக்க ஆட்டக்காரர் ஷேவாக் வலியுறுத்தி உள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது,

ஒருநாள் போட்டி மற்றும் டெஸ்ட் கப்டன் பதவியில் இருந்து விராட் கோலி விலகக்கூடாது என்று நினைக்கிறேன்.

விராட் கோலி தலைமையின் கீழ் இந்திய அணி சிறப்பாக விளையாடி பல வெற்றிகளை பெற்றுள்ளது. கப்டன் பதவியில் அவர் புத்திசாலித்தனமாக செயற்பட்டுள்ளார். அவர் ஒரு சிறந்த வீரர் என தெரிவித்தார். (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2447

Search for people, places and things

### அரவீந்தன்

Annathe Movie (Thanga Meenakshi Marriage Scene)




இந்த ஊரே திரும்பி பார்க்குற மாதிரி என் தங்கச்சி கல்யாணத்த நடத்த போறன்




நா ஓடி போறது கூட தெரியாம இன்னுமாடா இவன் என்ன நம்பீட்டு இருக்கான்


### கனிவிழி

வெயில் கொஞ்சம் அதிகமாக அடிச்சா வெயில திட்டுறிங்க




மழை கொஞ்சம் அதிகமா பெய்தா மழைய திட்டுறிங்க மனுசடா நீங்கலாம்

### கிஷானன்



பொண்டாட்டி பேச்ச கேட்கலனா climax ல தான் ஜெயிக்க முடியும்



பொண்டாட்டி பேச்ச கேட்டா ஒரே பாட்டுல வாழ்க்கைல ஜெய்ச்சிடலாம்

### றித்திகா



மழை அனைவருக்கும் சமம் அல்ல

### சதுரியன்

சாகனும் போல இருக்கும் மனநிலை எல்லாருக்கும் ஏற்பட்டிருக்கும். அந்த மனநிலையை எப்படி கடந்து வந்தீங்க...?



சாகாம தான்

### மிதுலா

10 அடில தண்ணி வரும் என்று விளம்பரம் பண்ணி வித்தானுங்க சார்



மேலையா கீழையான்னு சொல்லாம விட்டுட்டானுங்க சார்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இராசிபலன்

**11.11.2021**
ஐப்பசி 25, வியாழக்கிழமை
சப்தமி பிற்பகல் 12.48 மணிவரை
திருவோணம் முன்னிரவு 8.52 மணிவரை
சுபநேரம் 7.36-9.06 மணிவரை
இராகு காலம் -1.36-3.06 மணிவரை
சந்திராஷ்டமம்- திருவாதிரை,புனர்பூசம்

வளவன்


மேஷம்

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.


ரிஷபம்

அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள் ,நல்லவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், குடும்பத்தில் நிலவிவந்த குழப்பங்கள் தீரும்.


மிதுனம்

நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், விரயங்கள் மேலோங்கும் நாள்.


கடகம்

நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.


சிம்மம்

சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


கன்னி

மன நிறைவு கூடும் நாள், நீண்ட நாட்களாக செய்ய நினைத்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


துலாம்

செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


விருச்சிகம்

சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், வளர்ச்சி கூடும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு.


தனுசு

செய்தொழிலில் மேன்மையும், உயர்வும் கிடைக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.


மகரம்

ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கும், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், போசன சுகமுண்டு.


கும்பம்

சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உறவினர் தொடர்பான சுப செலவுகள் ஏற்படலாம்.


மீனம்

அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலை மோதும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் இடம்பெறலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

எதையும் பொறுமையோடு தேடு, பொறாமையோடு தேடாதே.

# யாழ்ப்பாணம் மாநகரசபை
# வழங்குநர்களைப் பதிவு செய்தல்-2022

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருட்களை விநியோகிக்க, சேவைகளை வழங்க ஆர்வமுள்ள அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், உள்ளூர் முகவர்கள், வழங்குநர்கள் சேவை வழங்குநர்களிடமிருந்து 'வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள்' கோரப்படுகின்றன. இதற்கான படிவங்களை நேரடியாக யாழ்.மாநகர சபையின் கொள்வனவுப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

| குறி. இல. | பொருட்கள் | குறி. இல. | சேவைகள் |
|---|---|---|---|
| G1 | காகிதாதிகள், எழுதுபொருட்கள். | S1 | அனைத்து அச்சிடுதல் நடவடிக்கைகள். |
| G2 | அலுவலகத் தளபாடங்கள் (இரும்புருக்கு, மரம், பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ்) | S2 | விளம்பரப்பலகைகள் அமைத்தல். |
| G3 | மேல் நாட்டு மருந்து வகைகள், மருத்துவ உபகரணங்கள் | S3 | ரியூப் ஒட்டுதல், ரயர் மாற்றுதல். |
| G4 | சித்த மருத்துவ மருந்துகள் | S4 | ஓட்டுவேலைகள், உலோக வேலைகள். |
| G5 | சிற்றுண்டி,மதிய உணவு, மென்பானங்கள், பால், பால்மா வகைகள், தேயிலை,சீனி, வேறு உணவுப் பொருட்கள் சம்பந்தமானவை. | S5 | ஏற்றியிறக்கும் வேலைகளுக்குப் பாரம் குறைந்த வாகனங்களை வாடகைக்கு விடல். |
| G6 | கோலவுடைத்துணிகள், யன்னல் திரைச் சீலைத் துணிகள், நில விரிப்புகள்,படுக்கை, மேசை விரிப்புகள், தலையணை உறைகள், மெத்தைகள், மழை அங்கிகள், கால் மிதிகள். | S6 | சுத்திகரிப்பு , ஏற்றியிறக்கல் வேலைகளுக்கு உழவு இயந்திரங்கள் வாடகைக்கு அமர்த்துதல். |
| G7. | தோற் பொருட்கள், பாதணிகள். | S7 | மின் மோட்டார்கள் ,மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள், குளிர்சாதனப் பெட்டிகள் திருத்தம். |
| G8 | கட்டடப் பொருட்கள் (சீமெந்து, ஓடு , கூரைத் தகடு, சீலிங், கம்பி வகைகள்) | S8 | மின் கலங்களுக்கு மீள மின்வலுவூட்டல். |
| G9 | தீந்தைகள், நிறந்தீட்டும் பொருட்கள். | S9 | இறப்பர் முத்திரை, புளொக் தயாரித்தல். |
| G10 | கற்கள், சல்லிகள், கிரவல், கருங்கல் துகள், மணல் ABC கலவை | S10 | வாகனங்கள் திருத்தம், சேர்விஸ் செய்தல். |
| G11 | நீர் வழங்கு பொருட்கள், PVC குழாய்கள், நீர்த் தாங்கி, நீர்ப்பம்பிகள். | S11 | கணனிகள், பிறின்ரர்கள், ஸ்கானர்கள், தொலைநகல்,கைவிரல் அடையாள இயந்திரங்கள், போட்டோப் பிரதி இயந்திரங்கள் திருத்தம். |
| G12 | வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணை உறுப்புக்கள். | S12 | கணனிகள் சேர்விஸ் செய்தல். |
| G13 | தேங்காய் மட்டை, விறகு , கிடுகு, சாக்கு. | S13 | போட்டோபிரதி இயந்திரங்கள் சேர்விஸ் செய்தல். |
| G14 | எரிபொருள், உராய்வு நீக்கிகள், கிறீஸ். | S14 | CCTV Camera அதனுடன் தொடர்புடைய பொருட்கள் சேர்விஸ் செய்தல். |
| G15 | இரும்புப் பொருட்கள் | S15 | வளிச்சீராக்கி திருத்தம், சேர்விஸ் செய்தல். |
| G16 | பொருத்துகைப் பொருட்களும், கண்ணாடி வகைகளும். | S16 | தனியார் பாதுகாப்புச் சேவை வழங்குதல். |
| G17 | செரமிக் பொருட்கள் | S17 | மென்பொருள் வடிவமைப்பு மற்றும் மென்பொருள் மேம்படுத்தல். |
| G18 | வாகனங்களுக்கான பற்றரிகள், ரயர்கள், ரியூப் முதலியன. | S18 | கனரக வாகனங்களினை வாடகைக்கு அமர்த்தல். |
| G19 | தீராந்திகள், நீப்பைகள், பலகைகள், பனை மரங்கள், சலாகைகள். | S19 | தனியார் சுத்திகரிப்பு, திண்மக்கழிவு சேகரிப்பு, மற்றும் பிரித்தெடுப்பு சேவைகள் வழங்கல். |
| G20 | தீயணைப்புச் சேவைக்குத் தேவையான பொருட்கள். | S20 | வீதி வேலை, கட்டட நிர்மாணம், பூங்கா/ மைதானம் பராமரிப்பு, கனரக வாகனங்கள் கையாளல் ஆகியவற்றிற்கு பயிற்றப்பட்ட தொழிலாளர்களை வழங்குதல். |
| G21 | மின்சார இயந்திர பொருட்கள் மின் கருவிகள், குளிரூட்டிகள், வீதி விளக்குகள். | S21 | திரவக் கழிவு, பரிகரிப்புத் தொகுதியை முகாமை செய்தல். |
| G22 | மேசன் வேலைக்குத் தேவையான பொருட்கள் (தூக்குக்குண்டு ,நீர்மட்டம், மூலை மட்டம்) | S22 | சேதனப் பசளை உருவாக்கல், பொதியிடல், சந்தைப்படுத்தல். |
| G23 | தச்சு வேலைக்குத் தேவையான பொருட்கள் (வாள், சீவுளி, அரம்) | S23 | மீள் சுழற்சிக்குள்ளாக்கக் கூடிய திண்மக் கழிவுகளை மீள் சுழற்சியாளர்களிடம் எடுத்துச் சென்று சந்தைப்படுத்தல். |
| G24 | வேலைத்தள உபகரணங்கள் (மண்வெட்டி, சுத்தியல், கோடரி, கத்தி, சவள்) | S24 | வாடகைக்கு வாகனங்கள் வழங்குதல். |
| G25 | வெல்டிங், ரிங்கரிங் தொடர்பான பொருட்கள் | S25 | கோலவுடைகள், திரைச்சீலைகள் தைத்து வழங்குதல். |
| G26 | விளையாட்டு உபகரணங்கள், பொருட்கள். | S26 | குழாய்க்கிணறு அமைத்தல். |
| G27 | நூலகங்களுக்குரிய நூல்கள், சஞ்சிகைகள். | | |
| G28 | தும்புத் தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கயிறு வகைகள். | | |
| G29 | சுத்திகரிப்புப் பொருட்களும்,கிருமி நாசினிகளும். | | |
| G30 | கணனி, போட்டோ பிரதி இயந்திரம், தொலைநகல், கைவிரல் அடையாள இயந்திரம் மற்றும் அவற்றிற்கான உதிரிப்பாகங்கள் வழங்கல். | | |
| G31 | குடிநீர் சுத்திகரிப்பிற்கான குளோரின் | | |
| G32 | CCTV கமரா, Web கமெரா அதனுடன் தொடர்புடைய பொருட்கள் | | |
| G33 | வெற்று பரல்கள் | | |
| G34 | தார் | | |

ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா.1000/= இற்கான காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையினை "ஆணையாளர்,மாநகரசபை, யாழ்ப்பாணம்" என்ற பெயருக்குப் பெறப்பட்டு, இதற்கான விண்ணப்பத்தினையும் பூரணப்படுத்தி, வியாபார பதிவுச் சான்றிதழின்/நிறுவன பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியுடன், பொருள் சேவை / விவரணப் பட்டியலினையும் இணைத்துக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவு செய்தல்-2022" எனக் குறிப்பிட்டுப் பதிவுத் தபால்மூலம் அல்லது நேரடியாக அனுப்பி வைத்தல் வேண்டும். பணமாகச் செலுத்த விரும்புபவர்கள் சபையின் 'முன்னரங்கு அலுவலகத்தில்' நேரடியாக கடமை நாட்களில் பி.ப. 3.00 மணிவரை செலுத்த முடியும்.

கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கோரப்படும் பொழுது கூறு விலைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்குப் பொருட்கள், சேவைகளை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள், சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றி பதிவுப் புத்தகத்தில் இருந்து நீக்கப்படும். வழங்குநர்களைப் பதிவு செய்தல்-2022 இற்கான படிவங்களை 11.11.2021 முதல் யாழ். மாநகர சபையின் கொள்வனவுக் கிளையில் பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்பங்கள் யாவும் அவற்றுக்கான கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவு செய்தல்- 2022" எனக் குறிப்பிட்டுப் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக "முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். 30.11.2021 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

( சி-2988)

முதல்வர் , மாநகரசபை, யாழ்ப்பாணம்.

# குழாய்க்கிணற்றிலிருந்து பொங்கிப்பாயும் தண்ணீர்



(அராலி)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட ஆனைக்கோட்டை - முள்ளிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலுள்ள குழாய்க் கிணற்றிலிருந்து தண்ணீர் பொங்கிப்பாய்கின்றது.

குறித்த கிணற்றிலிருந்து இரண்டு நாட்களாக தண்ணீர் இவ்வாறு பாய்கின்றது.

நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்ததாலேயே தண்ணீர் இவ்வாறு மேல்நோக்கி பாய்கின்றது. (4-5-104)



யாழ்ப்பாணம் சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் சூரன்போர் உற்சவம் நேற்று முன்தினம் பெய்த கடும் மழை வெள்ளத்திற்கு மத்தியில் சிறப்புற இடம்பெற்றது.

# பருத்தித்துறையில் அதிகூடிய மழை வீழ்ச்சி பதிவு

(குப்பிழான்)

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை முதல் நேற்றுப் புதன்கிழமை காலை வரையான 24 மணித்தியாலங்களில் யாழ்.மாவட்டத்தில் பருத்தித்துறையில் அதிகூடிய மழைவீழ்ச்சியாக 189.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த காலப் பகுதியில் தெல்லிப்பழையில் 126.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், அச்சுவேலியில் 124.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், திருநெல்வேலியில் 72.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், சாவகச்சேரியில் 67.2 மில்லிமீற்றர் மழைவீழ்சியும், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிப் பகுதியில் 56.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்ப்பாணம் கோட்டையில் 55.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-5-18)



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று புதன்கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பாக அமைந்துள்ள ரவிராஜ் உருவச் சிலை முன்பாக இடம்பெற்றது. (படம்:-சுபேசன்)

## பணி நயப்பும் மணி விழா மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

ஓய்வு நிலை யாழ்.மாவட்ட முன்னாள் அரச அதிபர் நா.வேதநாயகத்தின் பணி நயப்பும் மணிவிழா மலர் வெளியீடும் அளவெட்டி மகாஜனசபை தலைவர் வை.சுப்பிரமணியம் (ஜே.பி) தலைமையில் அளவெட்டி மகாஜனசபை மௌன தவமுனி பொ.கைலாசபதி அரங்கத்தில் எதிர்வரும் 14 ஆம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறும். (4-5)

## தமிழியல் ஆய்வு மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையினால் நடத்தப்படும் 'பன்முக நோக்கில் சங்க இலக்கியம்' எனும் கருப்பொருளில்அமைந்த அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் 16,17 ஆம் திகதியில் நடைபெற்றது. தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ம.இரகுநாதன் தலைமையில் முதல் நாள் நிகழ்வு காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். ஆர்வம் உள்ளவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம். பார்வையாளர்களுக்கு முன் பதிவுகள் எவையும்அவசியம்இல்லை எனவும் பேராசிரியர் ம.இரகுநாதன் தெரிவித்தார். (4-5)

## மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ். நீரிழிவுக் கழகமும் வட பிராந்திய லயன் கழகங்களும் இணைந்து நடத்தும் இல்வச மருத்துவ முகாம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை யாழ். போதன வைத்தியசாலையில் இடம் பெற்றது.இவ் மருத்துவ முகாம் நிகழ்வை யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி ஆரம்பித்து வைக்கவுள்ளார். (4-5)

## பொதுக் கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

(யாழ்ப்பாணம்)

புலோலி கிழக்கு அருள்மிகு ஸ்ரீ முதலி (மனோன்மணி) அம்பாள் ஆலய தர்ம பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் அண்மையில் தலைவர் மு.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதில் க.ராகீஸ்வரன் தலைவராகவும், க.துஷ்யந்தன் உப தலைவராகவும், இ.கிருபாகர சூரியன் செயலாளராகவும், திருமதி பி.சர்மிலா உப செயலாளராகவும், ர.வினோதீஷ் பொருளாளராகவும தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் 13 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர் என ஆலய தர்மபரிபாலன சபை செயலாளர் இ.கிருபாகரசூரியன் தெரிவித்தார். (4-5)

## சாரதிக்கு விளக்கமறியல்

(கண்டாவளை)

பரந்தன் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு 11.40 மணியளவில் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி -மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஏற்பட்டது.

குறித்த விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதியை கைது செய்த கிளிநொச்சி பொலிஸார் நேற்றுமுன்தினம் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த சாரதியை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (4-5-315)

# பரிசளிப்பு விழா

(கிளிநொச்சி)

கிளி/சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் நடராசா ராமதாஸ் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய ஆரம்பப்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உதவிக்கல்விப்பணிப்பாளர் சி.கணேசலிங்கம், சிறப்பு விருந்தினராக பளை கோட்டக் கல்விப்பணிப்பாளர் தி.திலீபன், கௌரவ விருந்தினராக பழைய மாணவன் செ.கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-5)



யாழ்.பல்கலைக்கழகத்தில் பரீட்சைக்காக வந்து தங்கி இருக்கின்ற மாணவர்களின் அனர்த்த நிலையை கருத்திற்கொண்டு மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனால் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன. (படம்:-கஜிந்தன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 140 | 160 | 150 |
| தக்காளி | 550 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 |
| கோவா | 200 | 150 | 160 |
| கரட் | 160 | 250 | 300 |
| பூசணி | 60 | 60 | 60 |
| புடோல் | 200 | 240 | 150 |
| வாழைக்காய் | 60 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 180 | 250 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 160 |
| பாகற்காய் | 550 | 450 | 800 |
| வெண்டிக்காய் | 140 | 140 | 240 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 150 |
| பயற்றங்காய் | 600 | 550 | 500 |
| லீக்ஸ் | 250 | 260 | 300 |
| பீற்றூட் | 120 | 70 | 80 |
| கறிமிளகாய் | 400 | 340 | 350 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 500 |
| போஞ்சி | 350 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 140 | 160 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 100 |
| தேசிக்காய் | 400 | 400 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 280 | 280 |
| வெங்காயப்பூ | -- | -- | -- |
| முள்ளங்கி | 140 | 150 | 150 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 90 | 30 |
| ஈரப்பலா | 60 | -- | 100 |

# கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

# பகுதி பகுதியாக நாட்டை மீண்டும் முடக்க திட்டம்

(கொழும்பு)

**நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சில பிரதேசங்கள் அல்லது பகுதிகளை முடக்க வேண்டி ஏற்படும் என சுகாதார அமைச்சின் கொவிட்-19 வைரஸ் பரவல் செயற்பாடுகளின் பிரதான தொடர்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.**

கொரோனாத் தொற்றுக்களின் எண்ணிக்கை 5 - 7 வீதத்தில் உயர்ந்துள்ளதென்றும் இது தொற்றாளர்களின் எண்ணிக்கையில் விரைவான அதிகரிப்புக்கு வழிவகுக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த வாரஇறுதி மற்றும் விடுமுறை நாட்களில் மக்கள் நடந்துகொண்டதன் விளைவுகளை இன்னும் இரண்டு வாரங்களில் பார்க்க முடியும்.

மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பேணுவதற்காகவே நாடு திறக்கப்பட்டுள்ளது, உல்லாசப் பயணங்கள் செல்வதற்காக அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

சுகாதாரச் சட்டங்களை மக்கள் கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில், கொரோனா பரவல் அதிகரித்து, கல்வி, பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளும் வீழ்ச்சியடையும்.

எதிர்காலத்தில் வைரஸ் பரவுவதைப் பொறுத்து, சில பிரதேசங்கள் அல்லது பகுதிகள் முடக்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# சம்பிக்கவுக்கு எதிராக மகிந்தானந்த முறைப்பாடு



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு பதிவு செய்தார்.

இந்தியாவில் இருந்து நனோ நைதரசன் திரவ உரத்தை இறக்குமதி செய்வதில் மோசடி இடம்பெற்றதாக பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க நேற்று முன்தினம் பாராளு மன்ற விவாதத்தின் போது தெரிவித்த கருத்துக்கு எதிராகவே விவசாய அமைச்சர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்தார். (நி-5)

## வெளியேற மறுத்தால் சட்ட நடவடிக்கை



(ஹற்றன்)

மண் சரிவு ஏற்படும் அபாயமுள்ள பிரதேசங்களிலிருந்து வெளியேற மறுப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. (நி-5)


## கீரிமலை சிவபூமி முதியோர் ஆச்சிரமம்

பின்வரும் பணிகளுக்கு பொருத்தமானவர்கள் தேவை.

1. **மேற்பார்வையாளர் - ஆண்/ பெண்**
2. **சமையலாளர்**
3. **பராமரிப்பாளர்**

விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை 15.11.2021 இற்கு முன் தபால் மூலம் அல்லது நேரில் விண்ணப்பிக்கவும். (8559)

தலைவர், சிவபூமி அறக்கட்டளை,
தலைமை அலுவலகம், கோண்டாவில்.


## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப்பெயர் மாற்றம்

### 33/16, துணைவி ஒழுங்கை, வட்டாரம்-12

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்-12 துணைவி ஒழுங்கையிலுள்ள இல. 33/16 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் **சொந்தக்காரர்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 56/ 13.07.1967ம் இலக்க உறுதியால் **ஆறுமுகம் வேலுப்பிள்ளை** ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடியுறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

**வேலுப்பிள்ளை கந்தசாமி** ஆகியவர் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 901/04.10.1971ம் இலக்க உறுதியால் குறித்த **வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்** ஆகியவரிடமிருந்து அறுதியாக பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**நவரத்தினம் சச்சிதானந்தம்** ஆகியவர் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு வ.மயில்வாகனம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 135/15.12.1973ம் இலக்க உறுதியால் குறித்த **வேலுப்பிள்ளை கந்தசாமி** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**சற்குரு விமலதருமராசா பெண் ஆனந்தஜோதி** ஆகியவர் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 353/09.11.1981ம் இலக்க உறுதியால் குறித்த **நவரத்தினம் சச்சிதானந்தமும் பெண் பரமேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **சற்குரு விமலதருமராசா பெண் ஆனந்தஜோதி** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **சற்குரு விமலதருமராசா பெண் ஆனந்தஜோதி** ஆகியவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர்/ செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (8560)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப்பெயர் மாற்றம்

### 78/05, கல்லை வேம்படி 1ம் ஒழுங்கை, வட்டாரம்-09

வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் உப அலுவலக எல்லைக்குட்பட்ட வட்டாரம்-09 கல்லை வேம்படி 1ம் ஒழுங்கையிலுள்ள இல.78/05 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் **சொந்தக்காரர்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய ஆதனத்தில் சொரியலாய் 1/16 பங்கிற்கு **ஆறுமுகம் இராசதுரை பெண் இராசேஸ்வரி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு தா.சங்கரப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 9048/02.04.1969ம் இலக்க உறுதியால் **வேலு ஆறுமுகமும் பெண் பொன்னுவும்** ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்திற்கு **ஆறுமுகம் இராசதுரை கைம்பெண் இராசேஸ்வரி மறுபெயர் இராசமணி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 11953/30.08.2010ம் இலக்க உறுதியால் குறித்த ஆதனம் 20.04.1899ம் திகதி நொத்தாரிசு ச.கதிரவேலுப்பிள்ளை முகதாவில் 11465ம் இலக்கத்திலும் 20.07.1912ம் திகதி நொத்தாரிசு க.சுப்பிரமணியம் முகதாவில் 3458ம் இலக்கத்திலும் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதிகளின் படி தனது பிதாவின் பிதா கண்ணன் வேலுவுக்கு சொந்தமாக இருந்ததென்றும் அவர் காலஞ்செல்ல தனது தந்தையாரான வேலு ஆறுமுகத்துக்கும் தனது பெரிய தந்தையாரான வேலு நாகமுத்துவுக்கும் முதுசமாக வந்தடைந்ததென்றும் அக்காலப்பகுதியில் பெரிய தந்தையாரான குறித்த வேலு நாகமுத்து என்பவர் மலேசியாவில் வசித்து வந்திருந்தார் என்றும் அவருக்குரிய பாகத்தை தனது தந்தையாரான வேலு ஆறுமுகத்தையே ஆண்டனுபவிக்கும்படி விட்டுச் சென்றார் என்றும் அன்றிலிருந்து 1982ம் ஆண்டு தனது தந்தை இறக்கும் வரை அவரின் ஆட்சியிலேயே இருந்ததென்றும் அவருக்குப் பின் அவரது ஒரே மகளான தானே குறித்த ஆதனத்தில் கடந்த 28 வருடங்களுக்கு மேலாக நீடித்த தடங்கலற்ற ஆட்சியில் இருந்து வருவதாகவும் வெளிப்படுத்தியும் குறித்த ஆதனத்தை நிந்தப்படுத்தியும் பிரகடன உறுதியை நிறைவேற்றியிருந்தார்.

**தவம் சுரேஸ்** பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 12596/01.03.2011ம் இலக்க உறுதியால் குறித்த **ஆறுமுகம் இராசதுரை கைம்பெண் இராசேஸ்வரி மறுபெயர் இராசமணி** ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **தவம் சுரேஸ்** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்துமூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **தவம் சுரேஸ்** ஆகியவரிற்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தலைவர்/ செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (8561)

# ஆப்கானிஸ்தானில் ஆறு மாதங்களில் 400 இற்கு மேற்பட்ட குழந்தைகள் வன்முறைகளால் உயிரிழப்பு

## யுனிசெப் கவலை



(காபூல்)


**ஆப்கானிஸ்தானில் இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் மாத்திரம் 460 குழந்தைகள் வன்முறையால் உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம் தெரிவித்துள்ளது.**

இது குறித்து குறித்த நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த வியாழக்கிழமை காலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பெண் குழந்தைகள், இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளிட்ட ஒன்பது பேர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் பல ஆண்டுகள் நீடித்த உள்நாட்டுப் போர் குறித்து தெரிவித்துள்ள யுனிசெப், ஆப்கானிஸ்தானில் போர் காரணமாக ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் வறுமை, உணவுப் பஞ்சம், ஊட்டச்சத்து குறைபாடு போன்ற பிரச்சினைகளாலும் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் யுனிசெப் கவலை வெளியிட்டுள்ளது. (நி-5)

# ஜப்பானில் பறவைக் காய்ச்சல் 143,000 கோழிகள் அழிப்பு



(டோக்கியோ)

ஜப்பான், வட-கிழக்கில் உள்ள ஒரு கோழிப் பண்ணையில் தீவிர தொற்று நோயான பறவைக் காய்ச்சல் பரவியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

2021 குளிர்காலத்தில் முதல் கண்டறியப்பட்ட பறவைக் காய்ச்சல் கொத்தணியாக இது பதிவாகியுள்ளதாக ஜப்பானிய விவசாய அமைச்சு நேற்று தெரிவித்தது.

பறவைக் காய்ச்சல் தொற்று நோய் கண்டறியப்பட்டதை அடுத்து அகிடா ப்ரிஃபெக்சரில் உள்ள ஒரு பண்ணையில் சுமார் 143,000 முட்டையிடும் கோழிகள் அழிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே உலகம் கொரோனாத் தொற்று நோயால் நெருக்கடிகளை எதிர்கொண்டு வரும் நிலையில் இது கவலையை இரட்டிப்பாக்கியுள்ளது. (நி-5)

## தாய்வான் வான்பரப்பில் 20 சீன விமானங்கள் பிரவேசிப்பு

(தைபே)


தாய்வானின் வான் பாதுகாப்பு வலயத்திற்குள் 20 சீனப்போர் விமானங்கள் நேற்று முன்தினம் ஊடுருவியதாக அதன் தேசிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

பீஜிங்கால் பலமுறை எதிர்க்கப்பட்ட அமெரிக்கா உள்ளிட்ட ஜனநாயக நாடுகளுடன் மூலோபாய உறவுகளை அதிகரிப்பதன் மூலம் சீன ஆக்கிரமிப்பை தாய்வான் எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)



நேற்று முன்தினம் திருமண பந்தத்தில் இணைந்தார் பெண் கல்விப் போராளி மலாலா.

# எஸ்.பி.பிக்கு பத்ம விபூஷண் விருது





(டில்லி)


கலைத்துறையில் சிறந்த சேவையாற்றியதற்காக மறைந்த திரைப்படப் பின்னணிப் பாடகர் "பாடும் நிலா" எஸ்.பி. பால சுப்ரமணியத்திற்கும் பின்னணிப்பாடகி சித்திராவிற்கும் இந்திய அரசின் உயர்ந்த விருதான பத்ம விபூஷண் விருது வழங்கப்பட்டது.

எஸ்.பிக்கான இந்த விருதை அவர் சார்பில் அவரது வாரிசான எஸ்.பி.பி. சரண் பெற்றுக் கொண்டார். (நி-5)

# கடும் மழையால் மன்னாரில் 5700 ஏக்கர் வயல் நிலம் நீரில் மூழ்கியது

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக 5700 ஏக்கர் வயல் நிலங்கள் முற்றாக நீரில் மூழ்கியுள்ளன என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.**



மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக மாவட்டத்தின் பல கிராமங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

புமுதி வேளாண்மையில் ஈடுபட்டிருந்த பல வயல் நிலங்கள் மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 2580 ஏக்கர் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 990 ஏக்கர், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 180 ஏக்கர் மற்றும் மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் 560 ஏக்கர் புமுதி வேளாண்மையும் பாதி க்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் மொத்தமாக 5700 ஏக்கர் வயல் நிலங்கள் முற்றாக நீரில் மூழ்கியுள்ளன. (4-5-285)

## கிளிநொச்சி மாவட்டத்தில் ஆறு மாத காலப்பகுதியில் ஆயிரம் ஏக்கர் காணி விடுவிப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆறு மாதங்களில் காணிகளற்ற குடும்பங்களுக்கு ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட காணி வழங்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவட்டத்திலுள்ள காணிகளற்ற பொது மக்களுக்கு காணிகளை வழங்குவதன் மூலம் நெற்செய்கை, மறுபயிர்ச் செய்கை, கரும்புச் செய்கை மற்றும் தென்னைப் பயிர்ச் செய்கை மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளை திட்டமிட்ட வகையில் மேற்கொண்டு வருகிறார்.

இவ்வாறு, கடந்த மார்ச் மாதம் முதல் ஆறு மாத காலப் பகுதியில் மொத்தம் ஆயிரத்து 42 ஏக்கர் அளவான காணிகளை கிளிநொச்சி மாவட்ட மக்களிடம் கையளித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மேலதிகமாகவும் வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் கீழிருக்கும் பயிர்ச் செய்கைக்குப்பொருத்தமான காணிகளை விடுவித்து கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயம் மற்றும் தொழிற்றுறை மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-5-350)

## முல்லைத்தீவு கடற்கரையிலும் கரையொதுங்கும் கடற்தாவரங்கள்



(பனிக்கன்குளம்)

சீரற்ற காலநிலை காரணமாக வடக்கில் தொடர்ந்து பெய்துவரும் கனமழையினால் முல்லைத்தீவு மாவட்டத்திலும் தாழ்நிலப் பகுதிகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதேவேளை முல்லைத்தீவு கடல் கொந்தளிப்பாக காணப்படுவதோடு கடற்கரையில் தாவரங்கள் பல கரையொதுங்கி வருகின்றன.

முல்லைத்தீவு கடற்கரையில் பல கிலோமீற்றர் தூரத்துக்கு இவை கரையொதுங்கியுள்ளன.

இதனால் மீன்பிடித் தொழிலுக்கு பாரிய சவால் ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை யாழ்ப்பாண கடற்கரையிலும் இவ்வாறு கடற்தாவரங்கள் பல கரையொதுங்கி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4-5-281)

## இரணைதீவு மக்கள் தேவாலயத்திற்குள் தஞ்சம்



(அக்கராயன்)

பூநகரி இரணைதீவில் கடும் மழை காரணமாக தற்காலிக குடிசைகளில் வாழ்ந்த மக்கள் தேவாலயத்தில் தஞ்சம் அடைந்துள்ளதாக பூநகரி பிரதேச சபையின் உப தவிசாளர் மு. எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் இரணைதீவில் குடியேறிய குடும்பங்கள் தற்காலிக குடிசைகளில் வாழ்ந்து வந்தனர். இக் குடும்பங்கள் அடிப்படை வசதிகள் குறைந்த நிலையிலேயே வாழ்ந்து வந்தனர்.

இந்நிலையில் கட ந்த இரு நாட்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக தற்காலிக குடிசைகளில் வசிக்க முடியாத நிலையில் தேவாலயத்தில் தஞ்சமடைந்தனர். (4-5-350)

## சம்பள முரண்பாட்டை நீக்கக்கோரி அதிபர், ஆசிரியர்கள் போராட்டம்



(கிளிநொச்சி)

ஆசிரியர்கள் சம்பள முரண்பாட்டினை நீக்கக்கோரி கிளிநொச்சி முல்லைத்தீவில் நேற்று முன்தினம் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு கிளிநொச்சி வலய கல்வி அலுவலகத்திற்கு முன்பாக அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஒன்றிணைந்து குறித்த கவனயீர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்தனர்.

நாடு வங்குரோத்து நிலையினை அடைந்துள்ள நிலையில் நாங்கள் சம்பளத்தினை அதிகரிக்கச் சொல்லி கோரவில்லை. 20 ஆண்டுகளுக்கு மேலாக பரிந்துரைத்த சம்பளத்தினையே கோரி நிற்கின்றோம்.

எனவே சம்பந்தப்பட்ட அனைவரும் கருத்தில் எடுத்து உடனடியாக நிலுவையாக இருக்கின்ற சம்பளத்தினை வழங்கவேண்டும் என்று கோரி இந்தக் கவனயீர்ப்பினை மேற்கொண்டுள்ளோம் எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (4-5-281-316)



வவுனியா கந்தசுவாமி ஆலயத்தில் நேற்று முன்தினம் சூரசம்ஹார நிகழ்வு பக்தர்களின்றி சுகாதார நடைமுறைகளின் கீழ் இடம்பெற்றது. (படம்: வசந்தரூபன்)

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 14.11.2021-12.11.2022

# எட்டில் வந்தது குருபகவான்; எதிலும் கவனம் இனித்தேவை

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**எந்த நேரமானாலும் கேட்ட வர்க்கு கேட்ட உதவிகளைச் செய்து கொடுக்கும் கடக இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், 13.11.2021 முதல் 8 ஆம் இடத்திற்குச் செல்கின்றார். அஷ்ட மத்து குருவின் ஆதிக்கம் தொடங்கி விட்டது. உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான வர் குரு. எனவே, 6 இற்கு அதிபதி 8 ஆம் இடத்தில் மறைவது நன்மை தான். 'கெட்டவன் கெட்டிழல் கிட்டிடும் இராஜயோகம்' என்பதற்கு ஏற்ப இடையிடையே நல்ல பலன்களும் நடைபெறும். சங்கிலித் தொடர்போல கடன் சுமை வந்தாலும், அவற்றை அடைக்கக் கூடிய வாய்ப்பும் அடுத்த டுத்து வந்து சேரும்.

இடமாற்றங்கள், வீடு மாற்றங் கள் ஏற்படலாம். பணிபுரியும் இடத் தில் உங்கள் திறமைக்கு ஏற்ற அங்கிகாரம் கிடைக்காது. சுய ஜாத கத்தில் திசாபுத்தி பலம் பெற்றிருக்கு மேயானால் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். இடர்பாடுகள் ஏற்படுமேயானால் வியாழக்கிழமை தோறும் குரு பகவானை வழிபடு வது நல்லது.

**குருவின் பார்வை பலன்**

இந்த குருப்பெயர்ச்சியின் விளை வாக குரு பகவான் உங்கள் இராசி க்கு 2, 4, 12 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். குருவின் பார்வை 2 ஆம் இடத்தில் பதிவதால் தன ஸ்தானம் புனிதமடைகின்றது.

அது மட்டுமன்றி வாக்கு மற்றும் குடும்பம் பற்றிய தகவல் அறியும் இடமாகவும் 2 ஆம் இடம் அமை வதால் குடும்ப முன்னேற்றம் கூடுத [illegible] ர்களில் சிலருக்கு வேலை கிடைத்து வருமானம் அதிகரிக்கும். பற்றாக் குறை அகலும். அரசு வேலை கிடைப் பதற்கான அறிகுறிகள் தென்படும்.

கல்யாணம் போன்ற சுபகாரி யங்கள் நடைபெற்று மகிழ்ச்சி தரும். கண்டகச் சனியின் ஆதிக்கம் இருப் பதால் எதையும் ஒருமுறைக்குப் பல முறை யோசித்துச் செய்வதே நல்லது.

குருவின் பார்வை 4 ஆம் இடத் தில் பதிவதால் தாயின் ஆதரவு கிடைக்கும். வீடு, வாகனம், நிலம் வாங்கும் யோகம் உண்டு.

குருவின் பார்வை 12 ஆம் இடத் தில் பதிவதால் சகோதர வழியில் சுபகாரியங்கள் நடைபெறும். ஆன்மி கப் பயணங்கள் அதிகரிக்கும். வீட்டி ற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வெளிநாட்டில் பணிபுரியும் உறவி னர்கள் மூலம் அனுகூலமான தக வல் வந்து சேரும்.

**நட்சத்திர பாதசாரப்படி பலன்கள்**

**செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சாரம் (13.11.2021 முதல் 12.12.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ் வாய். மேலும் யோககாரகனாகவும் விளங்குபவர். எனவே அவர் சாரத் தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் யோக மான காலம் தான். எனவே ஓகொடுக் கல்-வாங்கல்கள் திருப்தி தரும். வளர்ச்சி அதிகரிக்கும். தேங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடை பெறும்.

**ராகு சாரத்தில் குரு சஞ்சாரம் (13.12.2021 முதல் 1.3.2022 வரை)**

உங்கள் இராசிக்கு லாப ஸ்தான த்தில் ராகு சஞ்சரிக்கின்றார். சுயபல மற்ற கிரகம் ராகு என்பதால் அவர் சஞ்சரிக்கும் வீட்டிற்கு அதிபதியான சுக்கிரனின் தன்மையைப் பொறுத்து உங்களுக்கு பலன்களை வழங் குவார். எனவே இக்காலத்தில் செல விற்கேற்ற வரவு வந்து சேரும். செய்தொழிலில் சிறுசிறு மாற்றங்கள் ஏற்படும். கடன் சுமையின் காரண




மாக கவலைகள் அதிகரிக்கும்.

**சுய சாரத்தில் குரு சஞ்சாரம் (2.3.2022 முதல் 13.4.2022)**

உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவர் தனது சுய சாரத்தில் சஞ்சரி க்கும் பொழுது மறைமுக எதிர்ப்பு களும், மாற்றுக் கருத்துடையோ ரின் எண்ணிக்கையும் அதிகரிக் கும்.

எதையும் துணிந்து செய்ய இயலாது. திட்டமிட்ட காரியங்கள் திசைமாறிச் செல்லும். கடன் சுமை கூடும். நிதானத்தோடும், பொறு மையோடும் செயற்படுவது நல்லது.

**ராகு-கேது பெயர்ச்சி காலம்**

குருப்பெயர்ச்சிக் காலத்தில் 21.3. 2022 இல் ராகு-கேது பெயர்ச்சி நிகழவிருக்கின்றது. இதுவரை உங் கள் இராசிக்கு 11 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான் இப்பொழுது 10 ஆம் இடத்தில் சஞ்ச ரிக்கப் போகின்றார்.

6 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த கேது இனி 5 ஆம் இடத்தில் சஞ்ச ரிக்கப் போகின்றார். எனவே தொழில் வளம் சிறப்பாக இருக்கும். எதிரிக ளின் பலம் குறையும். பிள்ளை களின் கடமைகளைச் செய்து முடிப் பீர்கள்.

**சிறப்பு வழிபாடு**

இல்லத்து பூஜை அறையில் குரு தட்சிணாமூர்த்தி படம் வைத்து பஞ்சமுக விளக்கேற்றி குரு கவசம் பாடி வழிபடுவது நல்லது.

மேலும் வடக்கு நோக்கி வீற்றி ருந்து அருள் வழங்கும் கற்பக விநா யகரை வாய்ப்பிருக்கும் பொழு தெல்லாம் நேரில் சென்று வழிபட்டு வருவது நல்லது.

**செவ்வாய் - சனி பார்வை மற்றும் சேர்க்கை**

13.11.2021 முதல் 6.12.2021 வரை செவ்வாய்-சனி பார்வைக் காலம், .

26.2.2022 முதல் 6.4.2022 வரை மகரத்தில் செவ்வாய்- சனி சேர்க்கைக் காலம், இக்காலத்தில் மிக மிக கவனத் தோடு செயற்படுவது நல்லது. கண் டகச் சனியின் ஆதிக்கமும் இருப் பதால் விரயங்கள் கடுமையாக இருக்கும். வீண் பிரச்சினைகள் அதிகரிக்கும்.

தொழிலில் பணியாளர் களால் நிம்மதி குறையும். பெரிய மு த லீடுகள் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது.

ஆரோக்கியத்திற்கான செலவு கள் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணை மற்றும் பிள்ளைகளின் குணங்களில் மாறுபாடு ஏற்படும். திடீர் பணிமாற்றங்கள் நிம்மதி இன்மையைக் கொடுக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

கடக இராசியில் பிறந்த பெண்க ளுக்கு அஷ்டமத்து குருவின் ஆதிக் கத்தால் பிரச்சினைகள் அதிகரிக்கும். வம்பு, வழக்குகள் தேடி வரும். உறவினர் பகை உருவாகும்.

கணவன்-மனைவிக்குள் ஒற் றுமை பலப்பட, விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத் துக் கொள்ளுங்கள்.

(தொடரும்)

## சீரற்ற காலநிலை

# உயிரிழப்பு 22 ஆக உயர்வு

(கொழும்பு)

நாட்டில் 20 மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 22 ஆக அதிகரித்தது.

அத்துடன், வெள்ளம் மற்றும் மண் சரிவால் 960 வீடுகள் பகுதியளவும், 18 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன.

சீரற்ற காலநிலையால் 17 ஆயிரத்து 481 குடும்பங்களைச் சேர்ந்த 62 ஆயிரத்து·247 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (நி-5)

# நீர்கொழும்பு- புத்தளம் வீதியில் போக்குவரத்து முற்றாக பாதிப்பு

(கொழும்பு)

நீர்கொழும்பு - புத்தளம் பிரதான வீதியின் கொடவல முச்சந்தியில் மரமொன்று முறிந்து வீழ்ந்துள்ளது.

இதன் காரணமாக அந்த பகுதியூடான போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. (நி-5)



# விவசாயிகள், மீனவர்கள் இல்லாத பகுதிகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகத்தில் கட்டுப்பாடு

## அமைச்சர் உதய கம்மன்பில அறிவிப்பு



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அண்மைக் காலமாக மண்ணெண்ணெயின் தேவை இரட்டிப்பாகியுள்ளது எனவும் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் இல்லாத பகுதிகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்வது கட்டுப்படுத்தப்படும் என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே இதை குறிப்பிட்டுள்ளார்.

நாளாந்தம் சுமார் 550 மெற்றிக் தொன் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்படுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

72 மணித்தியாலங்களுக்கு மின்சாரம் தடைப்படும் என்ற கட்டுக்கதை ஒன்று பரவியதால் அதிகளவு மண்ணெண்ணெயை மக்கள் கொள்வனவு செய்தமையாலேயே பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் இல்லாத பகுதிகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகிப்பது கட்டுப்படுத்தப்படும் என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார். (நி-5)

# மணல் மேடு சரிந்து மேலும் இருவர் பலி

(குருநாகல்)

குருநாகல் - ரிதிகம பகுதியில் உள்ள வீடொன்றின் மீது நேற்று முன்தினம் இரவு மண் மேட்டில் இருந்து கற்பாறைகள் சரிந்து விழுந்ததில் வயோதிபத் தம்பதியர் உயிரிழந்தனர்.

75 வயதான முதியவர் மற்றும் 65 வயதான அவரது மனைவி ஆகியோரே உயரிழுந்தவர்களாவர்.

இருவரது சடலங்களும் நேற்றுக் காலை மீட்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கேகாலை-ரஸ்னகொட பகுதியில் ஏற்பட்ட மண் சரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சிக்கிக் கொண்ட நிலையில் தந்தையும் மகனும் காணாமல் போயுள்ளனர்.

தாய் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். காணாமல் போனவர்களை தேடும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. (நி-5)

# சதொசவில் குறைந்த விலையில் அத்தியாவசியப் பொருட்கள் பொதி

(கொழும்பு)

லங்கா சதொச விற்பனை நிறுவனத்திடமிருந்து 15 அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய ஒரு பொதியை தற்போதைய சந்தை விலையை விட 1000 ரூபாய் குறைவாக வாங்க முடியுமென வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன அறிவித்தார்.

சதொச நிறுவனத்தின் நேரடி தொலைபேசி இலக்கமான 1998 இற்கு அழைப்பதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு இந்த 15 பொருட்களையும் நிவாரண விலைக்கு கொள்வனவு செய்ய முடியும் என இதன் போது அவர் சுட்டிக்காட்டினார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

## புத்துணர்ச்சி பெறுவது எப்படி?

திரும்பத் திரும்ப ஒரே மாதிரியான செயல்களைச் செய்து கொண்டிருப்பது தான் புத்துணர்ச்சியின்மைக்குக் காரணம்.

மற்றவர்களுடன் பழகும் முறைகளை மாற்றிப்பார்க்க வேண்டும். பிரச்சினைகளை அணுகும் முறையில் சில மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். புதிய முறை பிடித்திருக்கிறதா, பலனளிக்கிறதா? என்று அனுபவித்து அறிய வேண்டும்.

நம்மைக் கண்டு பொறாமைப்படும் கூட்டத்தில் வாழும் போது, அவர்களை விட நாம் உயரவேண்டும்; நம்மாலும் சிறப்பாக வாழ முடியும் என்று அவர்களுக்குக் காண்பிக்க வேண்டும் என்றெல்லாம் எண்ணத்தோன்றும். இத்தகைய எண்ணங்களுக்கு உரமூட்டினால் அவையே புத்துணர்ச்சியாக மலர்ந்துவிடும். கடுமையாக உழைக்க வேண்டும் என்று மன வேகம் ஏற்படும்.

ஒவ்வொருவரும் புத்துணர்ச்சியைப் பெறுவதற்கு வெவ்வேறு வழியைப் பின்பற்றக்கூடும். அவை என்னென்ன என்று பட்டியலிட்டால் அவை நீளும். அவரவரும் தத்தமது நிலையிலிருந்து புத்துணர்ச்சி பெறக்கூடிய வழிகளை எண்ணிப்பார்த்துச் செயற்பட வேண்டும்.


புதிதாகப் பல்வேறு விடயங்களைக் கற்றுக்கொள்ளும் முறை புத்துணர்ச்சியை அளிக்கக் கூடியதாக இருக்கும். அலுவலகம்–வீடு; கடை – வீடு என்று செக்கு மாடு மாதிரி செயற்படாமல் மனதிற்கு உற்சாகம் தரும் செயல்களில் இறங்க வேண்டும்.

பழைய நண்பர்களைச் சந்திக்கலாம். பிடித்த நண்பர்களுடன் சுவாரசியமான விடயங்களைப் பற்றி பேசலாம். மிகப் பிடித்த மானவர்களுடன் பிக்னிக் செல்லலாம். அப்படி சென்றுவிட்டு வந்தால் வழக்கமான பணிகளை மேலும் ஒன்றரை மடங்கு உற்சாகமாகச் செய்ய முடியும்.

மனத்தைக் கெடுக்கும் புத்தகங்களை யல்லாமல் உற்சாகத்தைக் கிளறக்கூடிய புத்தகங்களாகப் பார்த்து வாங்கிப் படிக்க வேண்டும். அதிலும் சாதாரணமாகப் பிறந்து, வாழ்வில் உயர்ந்த மனிதர்களின் வரலாறும், அவர்கள் படைப்புகளும் மிகுந்த பலனை அளிப்பனவாக இருக்கும். படிப்பது என்பது பொழுது போக்கிற்காக மட்டுமல்ல; நம்மை நாமே உயர்த்திக் கொள்வதற்காகவும் அமைய வேண்டும்.


இப்படியெல்லாம் செய்து வந்தால் நம் மனம், ரீ சார்ஜ் செய்யப்பட்ட பட்டரியாக மட்டுமல்ல, புது பட்டரி போல் ஆகிவிடும்.

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## செங்கல் வீடு



முன்னொரு காலத்தில் ஒரு காட்டில் பன்றி ஒன்று வாழ்ந்து வந்தது. அது மூன்று குட்டிகளை ஈன்றது. அவை மூன்றும் அழகாக இருந்தன. நாட்கள் சென்றன. குட்டிகள் மூன்றும் வளர்ந்துவிட்டன.

"மகன்களே! நீங்கள் இனி உங்கள் சொந்தக் கால்களிலேயே நிற்க வேண்டும். இங்கிருந்து புறப்படுங்கள். உங்கள் திறமைக்கும், முயற்சிக்கும் ஏற்ப வளமாக வாழுங்கள்" என்றது.

"அம்மா! நாங்கள் வருகிறோம்!" என்று மூன்று குட்டிகளும் புறப்பட்டன. அவை வெகு தொலைவு நடந்தன.

அப்போது வைக்கோல் போரைத் தலையில் சுமந்தபடி, ஒருவன் அவற்றின் எதிரில் வந்தான்.

அவனைப் பார்த்து முதலாவது பன்றிக்குட்டி "கோல் போரை எனக்குத்தா. நான் அதில் வீடு கட்டி இங்கேயே குடி இருக்கிறேன்" என்றது.

அவனும் வைக்கோல் போரை அதனிடம் தந்தான். அதில் வீடு ஒன்றைக் கட்டிக் குடியேறியது முதலாவது குட்டி.

மற்ற இரண்டு பன்றிக்குட்டிகளும் அங்கிருந்து வெகு தொலைவு நடந்தன. அவற்றின் எதிரில் கீற்றுகளைச் சுமந்தபடி ஒருவன் வந்தான்.

அவனிடம் இருந்து இரண்டாவது பன்றிக்குட்டி, கீற்றுகளை வாங்கி, அங்கேயே குடிசை போட்டுத் தங்கியது.

மூன்றாவது பன்றிக்குட்டி அங்கிருந்து புறப்பட்டது. வெகு தொலைவு சென்றது. வண்டி நிறைய செங்கற்களுடன் ஒருவன் அதன் எதிரில் வந்தான்.

அவனிடம் செங்கற்களை வாங்கியது அது. உறுதியான வீடு ஒன்று கட்டியது. அதில் குடி இருக்கத் தொடங்கியது.

அந்தக் காட்டில் கொடிய ஓநாய் ஒன்று இருந்தது. உணவு தேடி அலைந்த அது வைக்கோல் குடிசையைப் பார்த்தது. உள்ளே பன்றிக் குட்டி இருப்பதைப் பார்த்து அதன் நாவில் எச்சில் ஊறியது.

கதவைத்தட்டிய அது, "பன்றிக்குட்டியே! குடிசைக்குள் வரலாமா?" என்று கேட்டது. ஓநாயைப் பார்த்துப் பன்றிக்குட்டி, "உன்னை நான் உள்ளே அனுமதிக்க மாட்டேன்" என்றது.

"அனுமதிக்கமாட்டாயா? என் வாயினால் ஊதி இந்தக் குடிசையைப் பறக்கச் செய்வேன். என் வலிமை தெரியாமல் பிதற்றுகிறாயா?" என்று மிரட்டியது ஓநாய். "உன்னால் முடியுமானால் செய்து கொள்" என்றது பன்றி.

கோபத்தால் உறுமிய ஓநாய் தன் மூச்சை உள்ளுக்கு இழுத்தது. தன் வலிமையை கொண்டு காற்றை வெளியே ஊதியது. அந்த வைக்கோல் குடிசை அப்படியே பறந்து சென்றது.

என்ன செய்வது என்று தெரியாமல் நடுங்கிய படி நின்றது பன்றிக்குட்டி. அதன் மீது பாய்ந்த ஓநாய் அதை அப்படியே விழுங்கியது. (தொடரும்)

# மகாபாரதம்

241



உணராத அஞ்ஞானிகள் சம்சாரம் என்னும் சேற்றில் சிக்கிக்கொண்டு கரையேற முடியாமல் அல்லல்படுகின்றனர்.

ஒவ்வொருவரும் புதிதாக கர்மங்களைச் சேர்க்காமலும், உயிரில் கலந்த கர்மத்தை உதிர்த்தும் இன்பம்காணவேண்டும்.

சிறந்த அறிஞன் உலகப் படைப்பின் ரகசியத்தை அறிகிறான். அறிவீனர்கள் இதனை அறிய மாட்டார்கள்.

இன்பமானது அறிஞன், அறிவிலி, வீரன், கோழை, ஆற்றல் மிக்கவன், ஆற்றல் அற்றவன் என்ற பாகுபாடு அறிந்து ஒருவனை அடைவதில்லை. அவரவர்கர்ம வினைக்கு ஏற்ப வினைப் பயனை அடைகின்றனர். முக்தியை அடைய விரும்புவோர் நன்மை ஒன்றையே செய்து இன்பம் அடைகின்றனர்.

முக்திப் பாதையில் நாட்டம் இல்லாதவர் வேறு கர்மங்களைச்செய்து துன்புறுகின்றனர். பொருள் மீது கொள்ளும் ஆசை துன்பத்திற்குக் காரணம் ஆகிறது.

ஆசை அற்றவர்க்குத் துன்பம் இல்லை. மனிதப் பிறப்பில் அடையும் இன்பமும், சுவர்க்கத்தில் பெறும் இன்பமும் ஆசையற்றவன் பெறும் இன்பத்திற்கு ஈடாகாது.

முற்பிறப்பில் செய்யப்பட்ட கர்மமானது தீமையோ நன்மையோ எதுவாயினும் செய்தவன் அறிவுள்ளவனோ, அறிவீனனோ எவராயினும் அதன் பயனை நுகர்ந்தே ஆக வேண்டும்.

ஆதலால் பொருள் மீது பற்றுப்பாசங்களைத் துறத்தல் வேண்டும். இல்லையேல் ஆசை பேராசையாகி, சினமாகி, பொறாமையாகிக் கடுஞ்சொல்லைத் தோற்றுவித்து, தீய செயலுக்கும் காரணமாகிறது.

ஒரு பொருள் எனது என்னும் எண்ணத்தோடு இருக்கும் போது, அது பிரிய நேர்ந்தால் துன்பம் ஏற்படுகிறது.

அதுபோலவே உறவினர் பிரிந்தாலும் தாங்க இயலாத துன்பம் தோன்றுகிறது. நம் உயிர்க்கும் மற்றப் பொருள்களுக்கும் தொடர்பில்லை.

நாம் செய்யும் தர்மமே நம்மை (உயிரை)த் தொடர்ந்து வரும்.

அதுவே நாம் செல்லும் தேயத்திற்கு உறுதுணையாகும் என்ற தெளிவு பெற்றவர் பிறர் மரணத்திற்காக வருந்த மாட்டார்கள்.

சாதலும், பிறத்தலும் இயற்கை என்ற தெளிவு கொண்டு துயரத்தை விடுவாயாக" என்று அந்தணன் கூறினான்.

அதனைக்கேட்ட சேனஜித் மன்னன் அறிவுத் தெளிவு பெற்று உண்மை மார்க்கத்தை நாடி அமைதி அடைந்தான்" என்றார் பீஷ்மர். (தொடரும்)

பசுவைக் குளிப்பாட்டிப் பொட்டிட்டு
'லட்சுமி' என்று பாராட்டுவார்கள்.
தீனி மட்டும் வைக்கமாட்டார்கள்.
- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வெள்ளப்பெருக்கால் ஏற்பட்ட பேரழிவை ஈடுசெய்யுங்கள்

மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்பது மகாகவி உருத்திரமூர்த்தியின் மனப் பதிவு.

கல்லெடுத்து ஆழ்கிணறு வெட்டி கள்ளியும் முள்ளியும் ஆட்கொண்ட நிலத்தை உழுது பண்படுத்தி ஆழக்கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்து அதனைப் பாய்ச்சி பயிர் செய்திருக்கையில், ஒருநாள் சோவென்று கொட்டிய மழை பெரு வெள்ளமாய்ப் பாய்ந்தோடி செய்பயிரை அடியோடு சிதைத்துவிட,

வெறு நிலத்தைப் பார்த்து வெம்மிய விவசாயி மீண்டும் மண்வெட்டியைத் தன் தோளில் சுமந்து செல்கின்ற அந்த நிஜத்தை கவியாய் வடித்தார் மகாகவி.

மகாகவியின் வெளிப்படுத்தலுக்குள் ஒரு விவசாயி அனுபவிக்கின்ற துன்பமும் மீண்டும் அவன் செய்கின்ற விடாமுயற்சியும் ஒரே தளத்தில் காட்டப்படுகின்றன.

எத்தனையோ வருடங்களுக்கு முன்னதாக, மகாகவி பாடிய அந்தப் பாடல் பழையதாக இருந்தாலும் பேய் மழை பெய்து செய்பயிரை அழிக்கின்ற செயல் மட்டும் இன்னமும் சூடாகவே இருக்கிறது.

ஆம், இந்த வேதனை விவசாயிகளின் விதி என்பதுபோல நீண்டு செல்கிறது.

இந்தத் துன்பத்தினின்றும் விவசாயிகள் பிணை பெற முடியாது என்பதை மட்டும் அறுதியிட்டுக் கூறமுடியும்.

இத்தகைய நிலைமை தொடருமாயின், வேளாண் செய்கையில் இருந்து விவசாயிகள் முற்றுமுழுதாக வெளியேறுகின்ற ஒரு சூழ்நிலை உருவாகும்.

அவ்வாறு வேளாண் செய்கையில் இருந்து விவசாயிகள் வெளியேறுவார்களாக இருந்தால், உணவுப் பஞ்சம் ஏற்படுவது தவிர்க்க முடியாது என்பது தெரிந்ததே.

எனவே நிலத்தை உழுது பயிர் செய்து பல்லுயிர் ஓம்புகின்ற விவசாயிகள் காப்பாற்றப்பட வேண்டும்.

அவர்களுக்கு ஏற்படுகின்ற இழப்புகளை ஈடுசெய்கின்ற நடவடிக்கைகள் விரைவாக முன்னெடுக்கப்படுதல் அவசியம்.

அதிலும் விவசாயத்தால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்கின்றவர்கள், தாங்கள் அரச உத்தியோகத்தர்கள் என்ற மனநிலையுடன் செயற்படாமல், நாம் உண்ணுகின்ற உணவு அழிந்துவிட்டது.

இதனால் ஒரு விவசாயி எத்துணை துன்பப்படுவான் என்பதை உணர்ந்து; அவனுக்கு ஆறுதல் அளித்து ஏற்பட்ட சேதத்துக்கான இழப்பீடுகளை வழங்கும் வகையில் காரியம் ஆற்றி விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற மனநிலையுடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு செயற்படுவதன் மூலம் நாங்களும் எங்கள் எதிர்காலச் சந்ததியும் பசியாற முடியும்.

## அதிபர் - ஆசிரியர் முரண்பாட்டை தீர்க்க
## மேலதிகமாக 30 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு

(கொழும்பு)

பிள்ளைகளினதும் நாட்டின் எதிர்காலத்திற்காகவும் அதிபர்-ஆசிரியர் சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்காக எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் மேலதிகமாக 30,000 மில்லியன் ரூபாயை ஒதுக்குவதாகவும், அதற்கமைய மொத்த வரவு - செலவுத் திட்டத்தில் வரலாற்றில் முதல் முறையாக 7.5 சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளது என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்கள் அதிபர்-ஆசிரியர் தொழிற்சங்க பிரதிநிதிகளிடம் குறிப்பிட்டார்.

நேற்று நடைபெற்ற கலந்துரையாடலியே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன அவர்கள் இக்கலந்துரையாடலின் நோக்கத்தை தெளிவுபடுத்தினார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன கல்விச் சேவை சங்கத்தின் தலைவர் வசந்தா ஹந்பான்கொட அவர்கள் இதன்போது அதிபர்-ஆசிரியர் சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்கு ஸ்ரீ லங்கா பொதுஜன கல்விச் சேவை சங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட முன்மொழிவை நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்களிடம் கையளித்தார்.

1997ஆம் ஆண்டு தோற்றம் பெற்ற இந் நெருக்கடியின் முழுமையான சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்கு குறிப்பிட்ட கால வரையறை அவசியம் என ஒப்புக்கொண்ட அதிபர்-ஆசிரியர் தொழிற்சங்க பிரதிநிதிகள் அதன் ஆரம்ப கட்டமாக மூன்றில் ஒரு பங்கை எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக ஒரே தடவையில் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் மகிழ்ச்சியடைவதாக குறிப்பிட்டனர். (ம)

### வவுனியாவில் ஆரம்ப பிரிவு
## ஆசிரியர், மாணவனுக்கு கொரோனாத் தொற்று

(வவுனியா)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்ப பிரிவுக்கு கற்பிக்கும் ஆசிரியர் ஒருவருக்கும், ஆரம்ப பிரிவு மாணவன் ஒருவருக்கும் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெ[illegible]ள்ளனர்.

தனது உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டதையடுத்து குறித்த ஆசிரியர் மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையிலேயே அவருக்கு நேற்று கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் ஆரம்ப பிரிவு மாணவன் ஒருவருக்கும் அன்டிஜன் பரிசோதனையில் கோவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தொற்றுக்கு உள்ளானவர்களை சுயதனிமைப்படுத்துவதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களை இனங்காண்பதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-250)

## கரைச்சி பிரதேச சபையின் பாதீடு நிறைவேற்றப்பட்டது

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 9 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபையின் சபை அமர்வு கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

சபை ஆரம்பித்ததும் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.

விவாதங்களின் பின்னர் வாக்களிப்புக்கு விடப்பட்டது. 35 உறுப்பினர்கள் உள்ள சபையில் 34 பேர் வாக்கெடுப்பில் கலந்து கொண்டனர் ஆதரவாக 21 வாக்குகளும் எதிராக 12 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஒருவர் நடுநிலை வகித்திருந்தார். 9 மேலதிக வாக்குகளால் கரைச்சி பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு நிறைவேற்றப்பட்டது. (ம)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021


"மரங்களின் மத்தியில் செலவழிக்கும் நேரம் ஒருபோதும் வீணடிக்கப்படுவதில்லை." - கத்ரீனா மேயர் (அமெரிக்க எழுத்தாளர்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** குருக்கள் புதுக்குளம், மணியர் குளம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

## சத்திய தரிசனம்
## கடவுளை அடைய மூன்று வழிகள்



❖ மனம், ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரை மலர் போன்றது. அதன் ஒவ்வொரு இதழும் உலக மாயைகளுக்கு ஆசைப்பட்டு செல்ல விரும்பும். ஆனால், நீங்கள்தான் அதனை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் நல்ல மனம்கூடவீணாகப்போய் விடும். மனதை கட்டுப்படுத்தி இருப்பவர்களை, வெளியில் ஏற்படும் எத்தகைய துன்பங்களும் பாதிக்காது.

❖ கடவுளை அடையவேண்டும் என விரும்புபவர்கள் அதற்காக சிரத்தையான செயல்களைசெய்ய வேண்டும் என்பதில்லை. எளிதாக மூன்று வழிகளை மட்டும் பின்பற்றினால்போதும். இதயத்தை அன்பிலும், செயல்களை நேர்மையிலும், உணர்ச்சிகளை கருணையிலும் நனைத்துவிடுங்கள். இந்த மூன்றையும் சரியாகச் செய்தாலே, கடவுளை வெகு சீக்கிரத்தில் அடைந்து விடலாம்.

❖ இரும்புத்துண்டை நீரில் போட்டால் மூழ்கிவிடும். ஆனால், அதே இரும்பினை இலகுவாக்கி சிறிய பாத்திரமாக செய்து நீரில் விட்டால் மிதக்கும்.இதைப் போலவே மனதையும் இலகுவாக மாற்றிக்கொண்டால் உலக ஆசை என்ற மாயையில்மூழ்காமல், அதன் மீது பற்றில்லாமல் மிதந்து கொண்டிருக்கும்.

❖ மனதில் எப்போதும் இறைவனை மட்டுமே நினைத்துக் கொண்டிருங்கள். அவரது நாமத்தையே உச்சரியுங்கள். இறைசெயல் அல்லாத வேறு செயல்களில் ஆர்வம் காட்டாதீர்கள் . இப்படிப்பட்டவர்களின் மனம், பூக்களில் [illegible] தேனுக்கு சமமானதாக இருக்கும்.

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

14

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்

ஆனால் சுமேரியரும் அவர்களைத் தொடர்ந்து பாபிலோனியர்களும் 60 ஐ அடியாகக் கொண்ட எண் முறையை பாவித்ததால், அந்த எண் முறையில், எண் குறியீடு இடது பக்கம் ஆக அசையும் போது 60 இன் மடங்காகக் கூடும்.

Y என்ற குறியீடு சுமேரியன் ஒன்றையும் கிடைநிலை < என்ற குறியீடு சுமேரியன் பத்தையும் குறித்தது. மேலும் ஒரு எண்ணில் அவை இருக்கும் நிலை அவைகளின் தொகையை மாற்றியது. உதாரணமாக எங்கள் நவீன முறையில் "100" இல் இருக்கும் ஒன்றும் "10,000" இல் இருக்கும் ஒன்றும் வேறு வேறானவை. இந்த சுமேரியன் எண் முறையில் எண் ஒன்று, பத்தை அடியாகக் கொண்டது.

அவை Y, YY, YYY, YYYY, … YYYYYYYYY (1,2,3,4.....9) என இருக்கும். அப்படியே எண் <, <<, <<<, <<<<, <<<<< (10,20,30, 40,50) என இருக்கும். இந்த எண் ஒன்றும் (Y) எண் பத்தும் (<), நாம் எப்படி தசம நவீன முறையில் ஒருங்கிணைகிறோமோ அப்படியே இங்கும் இணைக்கப்படுகிறது. உதாரணமாக நவீன முறை 23 ஐ சுமேரியன் முறையில் " <<YYY" இப்படி குறிக்கப்படுகிறது. ஆனால் சுமேரியன் முறையில் இடைவெளி விட்டு எண்கள் எழுதப்பட்டால் அவை இடப்பெறுமானத்தைக் குறித்து நிற்கும். எடுத்துக்காட்டாக "Y <<YYY" என்பது 60+23 ஐ குறித்துக் காட்டுகிறது. எனவே "Y <<YYY" இன் பெறுமானம் 60+23 =83 ஆகும். நவீன முறை போன்றே மெசொப்பொத்தேமியா மக்களும் தங்களது புதிய "எண் இருக்கும் நிலை பொறுத்த" (Positional System) பெறுமான முறையை பாவித்தார்கள். ஆகவே 1, 60, 60 x 60 [3600],… என அதன் இருக்கும் நிலையின் பெறுமானம் இடது பக்கமாக 60 இன் காரணியால் கூடிக் கொண்டு போகும். எப்படி எமது தசம எண் முறையில் 2 என்பது தாம் இருக்கும் நிலையை பொறுத்து 2 அல்லது 20 அல்லது 200 என மாறுமோ அப்படியே சுமேரியன் முறையிலும் Y என்பது தாம் இருக்கும் நிலையை பொறுத்து Y அல்லது 60xY அல்லது 60x60xY என மாறும்.

360 பாகை, ஒரு அடியும் அதன் 12 அங்குலமும், ஒரு அலகாக டசின் என்ற அளவும் (பன்னிரண்டு கொண்ட அளவு) சுமேரியன் கணித்தின் தடம்களே.

தசம இலக்கத்தில் 1 தொடக்கம் 9 வரையான எண்கள் எழுதுவது போல, அறுபதை அடியாகக் கொண்ட சுமேரிய/பாபிலோனியா எண் கணிதத்தில், ஒரு முழு எண் 1 தொடங்கி 59 வரை படம் H இல் காட்டியது போல் எழுதப்படுகிறது.

சுமேரிய/பாபிலோனியா எண்களில் ஆரம்பத்தில் பூச்சியம் இல்லாமல் இருந்தது. இருப்பினும், அதற்கு பதிலாக முதலில் ஒரு காலியான இடம் அல்லது இடைவெளி (space) பாவிக்கப்பட்டது. அதன் பின்னர் ஒரு சிறப்புக் குறியீடு (△̂) அவர்களால் பாவிக்கப்பட்டது.

### எகிப்தியர்களின் மறை பொருட் குறியீடு எண் முறை (numeral hieroglyphs) (கி.மு.3000).

எகிப்தியர்கள் மிகப் பழைமையான எண் முறையாக மறை பொருட் குறியீடு (hieroglyphs) முறையைப் பயன்படுத்தினர். எகிப்தியர்களின் எண்களுக்கான மறை பொருட் குறியீடுகளாக 10 குறியீடுகள் இருக்கின்றன. இவை படம் (அ)ல் காட்டப்பட்டுள்ளன. இக்குறியீடுகள் ஒரு அலகு (ஒன்று), ஒரு பத்து, நூறு, ஆயிரம், ஒரு பத்தாயிரம், ஒரு இலட்சம் மற்றும் ஒரு மில்லியன் ஆகியவற்றுக்கு தனித்தனியாக உள்ளன. அவையே படம் (அ) வில் தரப்பட்டுள்ளன. எகிப்தியர்களுக்கு இடமிருந்து வலமாகவும், வலமிருந்து இடமாகவும் வாசிக்கும் பழக்கமுண்டு.

எடுத்துக்காட்டாக, எண் 3,244 ஐ உருவாக்க, பதின்மூன்று குறியீடுகள் தேவைப்பட்டன: மூன்று "ஆயிரம்" குறியீடுகள், இரண்டு "நூறு" குறியீடுகள், நான்கு "பத்து" குறியீடுகள் மற்றும் நான்கு "ஒன்றின்" குறியீடுகள். இவற்றைச் சேர்த்தே எண் தோன்றியது இவ்விலக்கம் படம் அ(1)ல் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறே மற்றைய எண்களும் தோன்றின.

தொடரும்

**நீங்களும் முயற்சிக்கலாம் 5**

**Y △̂ <YYY ன் பெறுமானம் என்ன?**


**விடை**

**1x3600+0x60+13x1= 3613**

**சுமேரிய/பாபிலோனியா எண்**

**Y என்ற குறியீடு சுமேரியன் ஒன்றையும் கிடைநிலை < என்ற குறியீடு சுமேரியன் பத்தையும் குறிக்கின்றது. இவ்விரு குறியீடுளையும் கொண்டே அவர்கள் எண்களை ஆக்கியுள்ளனர். சுமேரிய/பாபிலோனியா எண்களில் ஆரம்பத்தில் பூச்சியம் இல்லாமல் இருந்தது. இருப்பினும், அதற்கு பதிலாக முதலில் ஒரு காலியான இடம் அல்லது இடைவெளி (space) பாவிக்கப்பட்டது அதன் பின்னர் ஒரு சிறப்புகி குறியீடு அவர்களால் பாவிக்கப்பட்டது**

**படம் H சுமேரியர் / பபிலோனியர் எண்கள்**




**சுமேரிய-பாபிலோனியா எண்ணை தசம எண் முறைக்கு மாற்றுதல் உதாரணங்கள்**

1). << Y Y Y Y Y = 25

2). << Y Y Y Y Y = 20x60 + 5x1 = 1200+5 =1205

(இங்கு இடைவெளி இருப்பதால் << என்பது 60அடியின் அடுத்த இடத்தில் உள்ளது)

3). < <Y Y Y Y Y = 10x60 + 15x1 = 600+15 = 615

4). << Y Y Y Y < Y Y Y = 24x $60^3$ + 10x $60^2$ + 1x60 + 2 =5,184,000 + 36,000+ 60+ 2 = 5,220,062

**தசம எண்ணை சுமேரிய/பாபிலோனியா எண் முறைக்கு மாற்றுதல்**

1) 52 = <<<<< Y Y

2) 106 = 1x60 + 46x1 = Y <<<< Y Y Y Y Y Y

3). 240 = 4x60 = Y Y Y Y △̂

இங்கு △̂ பூச்சியதிற்கான விசேட குறிவீடு

4). 1000= 16x60+ 40x1 = < Y Y Y Y Y Y <<<<


5). 4000 = 1x3600 + 6x60 + 40x1 = Y Y Y Y Y Y Y <<<<

6). [illegible] 1x3600+ 0x60+ [illegible] Y △̂ [illegible] Y Y Y Y Y


**எகிப்தியர்களின் எண்களுக்கான மறைபொருட்குறியீடுகள்**

**10 குறியீடுகள் படம் (அ)**

**(இடமிருந்து வலமாக வாசித்தல்)**




**(வலமிருந்து இடமாக வாசித்தல்)**



## 16 பேர்...

பணிப்பாளர் நாயகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13,908 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## பிரதம ஆசிரியர்...

நேற்றுப் பிற் பகல் 3 மணியளவில் நடந்த இச்சந்திப்பின் போது வட மாகாணத்தின் நிலைவரங்கள் மற்றும் வடபகுதி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆளுநர் ஜீவன் தியாகராஜா பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களிடம் கேட்டறிந்து கொண்டார். (ம)

## வடக்கின் அனை...

மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தொடர் மழையால் நேற்று முன்தினம் யாழ். மாவட்டப் பாடசாலைகளும் நேற்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்டப் பாடசாலைகளும் மூடப்பட்டிருந்தன.

இந்நிலையில் இன்று தொடக்கம் அனைத்துப் பாடசாலைகளின் செயற்பாடுகளும் வழமைபோல நடைபெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ம)

## அதிபர் - ஆசிரியர்...

யில் அரச தரப்புக்கும் ஆசிரியர் சங்க தலைவர்களுக்கும் இடையே நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 10/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1162
வெற்றி இலக்கங்கள்
மேஷம் 9 7 9 7 7 2

### மெகா பவர்

திகதி 10/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0930
T 02 17 25 41 58

### மஹஜன சம்பத

திகதி 2021/11/10
சீட்டிழுப்பு இலக்கம் 4582
K 6 0 5 5 2 9

### கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 10.11.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2877
Z 37 55 66 72

### தன நிதானய

திகதி - 2021.11.10
சீட்டிழுப்பு இலக்கம் - 612
O 25 35 43 81

இதன்படி எதிர்வரும் 12ஆம் திகதி வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது இதுதொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட எதிர்பார்ப்பதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடுகள் உடனடியாக தீர்க்கப்படும் என பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ எமக்கு உறுதியளித்துள்ளார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் இந்த விடயம் இடம்பெற்றுள்ளதாகவும், ஜனவரி மாதத்திற்குள் முரண்பாடுகள் அதற்கேற்ப சரிசெய்யப்படும் என்றும் பசில் ராஜபக்ஷ உறுதிப்படுத்தினார் என ஆசிரியர் சேவைச் சங்கத்தின் செயலாளர் கூறினார். (ம)

## உயிரிழப்பு...

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த அனர்த்தங்களால் மேலும் 7 பேர் காயமடைந்துள்ளதுடன், ஒருவர் காணாமல்போயுள்ளார்.

அத்துடன், 17 மாவட்டங்களுக்கு உட்பட்ட 145 பிரதேச செயலகங்களில் உள்ள 60,264 குடும்பங்களைச் சேர்ந்த 212, 060 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம)

*(முன்னர் கிடைத்த செய்தி உள்ளே)*

## கொரோனா...

மேற்கண்டவாறு தெரிவித்தார்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகுவோரின் எண்ணிக்கை அண்மையில் சடுதியாக குறைந்திருந்த நிலையில் நேற்று முன்தினம் மேலும் 43 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

ஏனைய மாவட்டங்களைப்போல யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் மீண்டும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

பொதுமக்கள் சமூக இடைவெளி மற்றும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி செயற்படுவதன் மூலம் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் அரச அதிபர் தெரிவித்தார். (ம-18.33)

## வடக்கில்...

களில் அடுத்த 36 மணி நேரத்தில் 150 மில்லி மீற்றர் பலத்த மழைவீழ்ச்சியும் மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும் நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. (ம)

## நாடு மீண்டும்...

உலக விஞ்ஞான தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் எதிர்காலத்துக்காக சரியான வற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குவதை விடுத்து, அனைத்துக்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் எதிர்க்கட்சியினரின் மனோபாவத்தைத் தான் எதிர்பார்க்கவில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடு திறக்கப்பட்டு புதிய பொதுமைப்படுத்தலின் கீழ் அனைத்துச் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், போராட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் காரணமாக மீண்டும் கோவிட் தொற்றுப் பரவல் ஏற்படுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், நாட்டை மீண்டும் ஒரு முறை முடக்க நேரிடலாம். இதனால், பொதுமக்களுக்கும் நாட்டின் பொருளாதாரத்துக்கும் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் எதிர்க்கட்சியினர் புரிந்துகொள்ள வேண்டுமென்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

"எனது பதவிக்காலத்தில் இரண்டு வருடங்கள் கடந்துவிட்டன. இந்தக் காலப் பகுதியில், கோவிட் தொற்றுப் பரவலில் இருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான பாரிய வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவேண்டி ஏற்பட்டது.

அன்று ஆட்சி அதிகாரத்தில் இருந்த இன்றைய எதிர்க்கட்சியினர், இந்த நிலைமையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஐந்து வருடகால ஆட்சியின்போது ஏற்பட்ட தோல்விகள் மற்றும் பலவீனங்கள் காரணமாகவே, அவர்களுக்குப் பதிலாக என்னை இந்நாட்டு மக்கள் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தனர் என்றும் சுட்டிக்காட்டினார். (ம)

## வீடுகளுக்குச்...

ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் முதியவர்கள் வீடுகளில் இருந்தவாறே தமக்கான சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்படும் என்றும் ஆளுநர் மேலும் தெரிவித்தார். (ம)

## ஒரே...

லிங்கம் சக்கரவர்த்தி கருணாகரன், யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் ஐயம்பிள்ளை தயானந்தராசா ஆகியோர் "ஒரே நாடு - ஒரே சட்டம்" என்பதற்கான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் செயலணியின் அங்கத்துவ அமைப்பு மற்றும் விடய நிர்ணயம் தொடர்பாக பல்வேறு தரப்பினரிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ள பிரதிநிதித்துவங்களை கருத்திற் கொண்டு இந்த நியமனம் இடம்பெற்றுள்ளதாகக் குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ம)

## மக்கள் ஆதர...

லிப்டன் சுற்றுவட்டத்திற்கு அருகில் விக்கிரமராச்சி கண் மருத்துவ நிறுவனத்துடன் இணைந்த ZEISS VISION CENTERஐ திறந்து வைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்ததாவது,

கோவிட்-19 தொற்றுநோயைக் கட்டுப்படுத்த மக்களின் பங்களிப்பின் அடிப்படையில் பயணக் கட்டுப்பாடுகள் விதிப்பது குறித்து தீர்மானிக்கப்படும்.

மக்கள் எதிர்மறையான அணுகுமுறையைக் காட்டினால், பயணக் கட்டுப்பாடுகளை மீண்டும் சந்திக்க நேரிடும்.

கோவிட்-19 நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்த மக்களின் அதிக பங்களிப்புடன் இந்த துரதிர்ஷ்டமான நிலைமையை நாட்டிலிருந்து துடைத்தெறிய முடியும் என்றார். (ம)

## மன்னாரில்...

தொற்றால் மன்னாரில் வயோதிபப் பெண் ஒருவர் மரணமடைந்துள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த மன்னார் கீரிப் பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார். (ம-285)

சீட்டிழுப்பு வாரம் 100
சீட்டிழுப்பு திகதி 10.11.2021
புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 18 25
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,079,540.00

### அத கோடிபதி

கிழமை: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 1385
சீட்டிழுப்பு திகதி: 10.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 57,591,084
வெற்றி இலக்கங்கள் 02 31 50 70 M

### சனிதா

கிழமை: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 3720
சீட்டிழுப்பு திகதி: 10.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 38,757,025.50
வெற்றி இலக்கங்கள் 28 35 51 75 K

சுப்பர் ஜக்பொட் 5,425,812.80/=
திகதி: 10.11.2021
வெற்றி வாரம்: 3271
வெற்றி இலக்கங்கள் 22 50 55 61
விருச்சிகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,371,440.00/=

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1559
சீட்டிழுப்பு திகதி 10.11.2021
தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் W 14 38 61 72
அடுத்த சுப்பர் ஜக்பொட 69,533,673.20/=

### ஜயோதா Jayoda

சீட்டிழுப்பு வாரம் 1784
சீட்டிழுப்பு திகதி 10.11.2021
வெற்றி இலக்கங்கள் 12 19 27 44 M
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 27,794,092
தொ. பே.: 0112 333 5?47
Web: www.dlb.lk

# யாழில் தொடர் கனமழையால் 33 ஆயிரத்து 823 பேர் பாதிப்பு

## 111 வீடுகள் பகுதியளவில் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக 10,188 குடும்பங்களைச் சேர்ந்த 33,823 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

தற்போதைய காலநிலை தொடர்பாக யாழ். மாவட்டச் செயலரின் ஊடக சந்திப்பு நேற்று நண்பகல் யாழ்.மாவட்டச்செயலகத்தில் இடம்பெற்றபோதே இதனை தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் முதல் பெய்த மழை காரணமாக 243 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவானது. மிகக் குறுகிய காலத்திலேயே மழை வீழ்ச்சி ஏற்பட்டதன் காரணமாக பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டு இருக்கின்றது.

வயல் நிலங்கள் பலவும் வெள்ளப் பாதிப்புக்குள்ளானதாக அறியமுடிகின்றது. வெள்ள நிலைமை காரணமாக மாவட்டத்தில் இதுவரை 10,188 குடும்பங்களைச் சேர்ந்த 33,823 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவைத் தவிர்ந்த ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளிலேயே இந்த தரவுகள் கிடைத்திருக்கின்றன.

எவ்வாறிருப்பினும் 86 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மாத்திரமே இடம்பெயர்ந்தவர்கள் என்றவகையிலே 6 தற்காலிக இடங்களில் தங்கவைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கு தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு வீடு முழுமையாக சேதம் அடைந்துள்ள நிலையில் 110 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. (ம -33)

# கூட்டமைப்பின் எம்.பி சார்ள்ஸ் நிர்மலநாதனுக்கு கொரோனா தொற்று

(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ்நிர்மலநாதனுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இரு நாட்களுக்குமுன் அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையை அடுத்தே கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக மக்கள் சேவையில் ஈடுபட்டிருந்த சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி மழையில் நனைய நேரிட்டதாகவும் அதனால் தனக்கு தடிமல் தொற்று ஏற்பட்டிருந்ததாகவும் இந்நிலையில் பாராளுமன்ற அமர்வுகளுக்கு கலந்துகொள்ள கொழும்பு வந்தநிலையில், கொழும்பில் தனியார் வைத்திய சாலையொன்றில் கொரோனா பரிசோதனைகளை முன்னெடுத்திருந்தார்.

அதன்போதே அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். தற்போது அவர் குறித்த தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கொரோனா வைரஸுக்கான சிகிச்சை பெற்று வருகின்றார். (ம)

# உரப்பிரச்சினைக்கு தீர்வு வழங்காவிட்டால் பாராளுமன்றம் சுற்றி வளைக்கப்படும்

## அரசுக்கு எதிர்க்கட்சி எச்சரிக்கை

அரசாங்கம் உரப்பிரச்சினைக்குத் தீர்வை வழங்காவிட்டால், 26 ஆம் திகதியன்று விவசாயிகளை ஒன்றிணைத்து, பாராளுமன்றத்தைச் சுற்றிவளைக்கப் போவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார அறிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் வைத்து செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது பேசிய அவர், விவசாயத்தில் ஈடுபடுவதற்கு அவசியமான நீர் போதியளவில் காணப்படுகின்றபோதிலும், உரம் மற்றும் கிருமி நாசினிகளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பற்றாக்குறையின் விளைவாக விவசாயிகள் தமது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை ஆரம்பிக்கமுடியாத நிலையில் இருக்கின்றனர்.

இவ்வாறான தொரு பின்னணியில் இவ்வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2022 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவுத் திட்டத்தில் விவசாயத்துறைக்கான ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதம் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது.

எனவே அதற்கு முன்னதாக அரசாங்கம் உரப்பிரச்சினைக்குத் தீர்வை வழங்காவிட்டால், நாம் எதிர்வரும் 26 ஆம் திகதி விவசாயிகளுடன்பாராளுமன்றத்தைச் சுற்றிவளைப்போம். குறிப்பாக விவசாயிகளின் ஆயுதங்களுடனேயே அந்தச் சுற்றிவளைப்பு இடம்பெறும் என்பதை அரசாங்கம் நினைவில்கொள்ள வேண்டும் என்றார். (ம)





**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ, 1987 இல் பிறந்த மிருகசீரிடம், 04 ஆம் பாதம், சூரியன் செவ்வாய் 3 இல், கிரகபாவம் 6, அரச தொழில் புரியும் மணமகனிற்கு மணமகள் தேவை.

தொடர்பு (8568)

**077 616 1739**

**காணி விற்பனைக்கு**

முன்பக்கம் கொங்கிறீற் பிளாட் அடிக்கப்பட்டு 75 வீதம் பூர்த்தியாக்கப்பட்ட நிலையில் உள்ள வீடு ஒரு பரப்பு காணியுடன் விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவையில்லை.)

(C-2987)

☎-076 872 5148 வடமராட்சி, உடுப்பிட்டி.

**தவறவிடப்பட்டது**

PF- 2786 வாகனத்தின் முன்பக்க இலக்கத்தகடு (9.11.2021) அன்று முதல் யாழ்ப்பாணப் பிரதேசத்துக்குள் தவறவிடப்பட்டுள்ளது.

- கண்டு எடுத்தவர்கள் இவ் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

(C-2989)

10 முருகேசர்லேன் நல்லூர் 0777222524


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்


**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளில் (8567)

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். 076 825 7716 (ஆகாஸ்)

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-2918)

0768226240 DHL

**பெண் வேலையாட்கள் தேவை**

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு பெண் வேலையாட்கள் தேவை. வயது எல்லை 18 - 30 வரை. வேலை நேரம் காலை 7.30 மணி - 5.30 மணி வரை. மாத வேதனமாக 17,000/= - 25,000/= வரை வழங்கப்படும். (8555)

**074 049 0003**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.